# சமூக அறிவியல் I

## பகுதி - 2

## வகுப்பு IX

**Social Science I**
**Part 2**
**STD IX**
**Tamil Medium**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

**2024**

ST-933-1-SOCIAL SCI. I (T)-9-VOL-2

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
    பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
    திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
    உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
    தவ சுப ஆசிச மாகே
    காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
    பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
    ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**சமூக அறிவியல் I**



**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in
e-mail : scertkerala@gmail.com, Phone : 0471 - 2341883,
Typesetting and Layout : SCERT
First Edition : 2024
*Printed at* : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

அன்பார்ந்த மாணவர்களே,

தற்கால சமூகத்தை வேறுபடுத்தி அறிந்து கொள்ளவும், பயனுள்ள ஈடுபாடுகளில் செயல்பட்டு, பொறுப்புணர்வுமிக்க குடிமகனாக வாழ நம்மால் இயல வேண்டும். அதற்கு சமூக அறிவியல் கல்வி நமக்கு உதுவுகிறது. 'சோழ நாட்டிலிருந்து டெல்லி வரை' என்ற ஆறாம் பாடத்தில் சோழ நாட்டிலிருந்து டெல்லி சுல்தான்கள் வரையுள்ள வரலாறு விளக்கப்பட்டுள்ளது. 'நிறுவனங்களின் வழியாக மக்களாட்சிப் பரவல்' என்ற ஏழாவது பாடத்தில் வெவ்வேறு நிறுவனங்களின் வழியாக மக்களாட்சியின் பரவலைப் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. 'பாலினப் பாகுபாடற்ற சமூகத்தை நோக்கி' என்ற எட்டாவது பாடத்தில் பாலின வேறுபாடு, பாலின நிலை, நெறிமுறைகள் அரசியலமைப்பில் பாலின நிலை ஆகியவை விவாதிக்கப் படுகிறது. முக்கியமான தகவல் உறைவிடங்களை அறிமுகப்படுத்தியும், பகுப்பாய்வு செய்தும், விளக்கியும், அறிவு உருவாக்கம் ஏற்படும் விதத்தில் பாடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அறிவியல் – தொழில் நுட்ப வசதிகளைக் கற்றலில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. மக்களாட்சி மற்றும் மதச்சார்பற்ற மதிப்புகளுடன் அறிவியலும் அத்துடன் பன்முகத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் மனநிலையையும் இதன் வழியாக மாணவர்களிடம் உருவாக்கப்பட வேண்டும்.

வாழ்த்துக்களுடன்

**முனைவர். ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ,**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி. கேரளம்

# TEXTBOOK WRITING COMMITTEE

## Adviser

**Dr. K.N. Ganesh**
Chairman, Kerala Council for
Historical Research

## Chairperson

**Dr. Sivadasan P.**
Professor, Department of History
University of Calicut

## Experts

**Dr. K.K. Radha**
Principal (Rtd.)
Govt. College for Women
Thiruvananthapuram

**Dr. Pradeep Kumar K.**
Associate Professor & Head
Department of Political Science
Govt. College, Attingal, Thiruvananthapuram

**Dr. Baiju K.C.**
Professor & Vice Chancellor (in charge)
Department of Economics
Central University of Kerala, Kasaragod

## Members

**Bino P. Jose**
Assistant Professor,
St. Dominic's College Kanjirappally,
Kottayam

**Dr. Nandakumar B.V.**
Assistant Professor, S N College
Varkala, Thiruvananthapuram

**Yusuf Kumar S. M.**
Principal, GHSS, Chithara, Kollam

**Aju S.**
HSST, History GHSS
Vechoochira Colony, Pathanamthitta

**Pradeepan T.**
HSST, History GHSS, Palayad, Kannur

**Najeem A.**
Principal, GHSS, Kadakkal, Kollam

**Rajan M.**
HST, Social Science
GHS Nagalassery, Palakkad

**Mr. Sreejith M. Muthadath**
HST Social Science
CNN GHS Cherpu, Thrissur

**Sandhyarani P.S.**
HST, Social Science, GHSS Anchal West, Kollam

## Tamil Version

### Experts

**Dr. Santhi P**
Associate Professor Dept. of Tamil,
University College, Thiruvananthapuram.

**Dr. Shini S**
Associate Professor Dept. of Tamil,
University College, Thiruvananthapuram.

### Members

**Vijaya A**, Headmistress, GHS Pambanar.
**Geetha A**, HST Social Science, GHS Pambanar.
**Mary Stella Rosaline K**, Rtd. HSA, GGHSS Karamana.
**Nirmala Princy Bell J**, Rtd. HSA, GTHSS Chalai.

## Academic Coordinator

**Suresh Kumar S.**
Research Officer, SCERT, Kerala

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 06 | சோழ நாட்டிலிருந்து டெல்லி வரை | 111-128 |
| 07 | நிறுவனங்களின் வழியாக மக்களாட்சிப் பரவல் | 129-150 |
| 08 | பாலினப் பாகுபாடற்ற சமூகத்தை நோக்கி | 151-166 |


இப்பாடப்புத்தகத்தில் கற்றலுக்கு உதவும் சில அடையாளங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.


கூடுதல் வாசிப்பிற்கு மதிப்பீடு செய்வதற்கு உட்பட்டதல்ல


குறிப்பு தயாராக்குதல்


கற்றல் செயல்பாடு


கலவைப்பட உருவாக்கம்


மதிப்பீட்டு வினாக்கள்


கருத்துப் பலகை உருவாக்கம்


தொடர் செயல்பாடுகள்


கலந்துரையாடல் நடத்தலாம்

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.



# 6 சோழ நாட்டிலிருந்து டெல்லி வரை

" வரி செலுத்த வேண்டிய பூமி இராஜகேசரி என்ற ஆதவல்லவனின் பெயரில் அழைக்கப்படுகின்ற, மரக்கால் கொண்டு அளந்து நெல்லாகவும் தங்கமாகவும், நாணயமாகவும் வரி செலுத்த வேண்டும். .....அருள்மொழி தேவ வளநாடு என்றும் அழைக்கப்படும் தென்கடுவாயின் இங்க நாட்டிலுள்ள பாலையூர் கிராமம் சமணக் கோவிலும், குருக்களும் உட்பட்டதாகும். பன்னிரெண்டாயிரத்து ஐநூற்று முப்பது கலமும் இரண்டு தூணியும் ஒரு குறுணியும் ஒரு நாழியும் நெல்லை ராஜகேசரியின் பெயரிலுள்ள மரக்கால் கொண்டு அளந்து வரியாகச் செலுத்த வேண்டும்."

*South Indian Inscriptions* (Vol. 2., pages 47-48)

தஞ்சாவூரில் உள்ள பிரகதீஸ்வரர் கோவிலின் இரண்டாவது மாடியின் தெற்குச் சுவரில் காணப்பட்ட இராஜராஜ சோழனுடைய கல்வெட்டின் சில பகுதிகள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. இதில் என்னென்ன கூறப்பட்டுள்ளன எனப் பார்ப்போம். அரசனின் பெயரிலுள்ள மரக்காலைக் (அளவைப் பாத்திரம்) கொண்டு அளந்து நெல்லாகவும் தங்கமாகவும் நாணயமாகவும் வரி செலுத்த வேண்டும். தென்கடுவாய் மண்டலத்தின் ஒரு பகுதியான இங்க நாட்டிலுள்ள பாலையூர் கிராமத்தில் அளந்ததன் அடிப்படையில் இந்தப் பகுதியில் சமணக் கோவிலும் சமண குருக்களின் சமூகமும் உட்பட்டிருந்தது. 12530 கலமும் இரண்டு தூணியும் ஒரு குறுணியும் (தானியங்கள் அளக்கும் அளவைப் பெயர்கள்) ஒரு நாழியும் அளவு நெல் இங்கிருந்து கிடைக்க வேண்டும். இதை இராஜகேசரியான ஆதவல்லவனின் (இராஜாராஜ சோழன்) பெயரில் அழைக்கப்படுகின்ற மரக்கால் கொண்டு அளக்க வேண்டும்.

CE ஒன்பதாம் நூற்றாண்டு முதல் 13–ஆம் நூற்றாண்டு வரை தென்னிந்தியாவில் ஆட்சி புரிந்த சோழர்களின் பேரரசைக் குறித்து இந்தக் கல்வெட்டில் விவரிக்கப்பட்டுள்ளது. சோழப் பேரரசின் பொருளாதார நிலையைக்குறித்து இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னென்ன தகவல்கள் இதிலிருந்து நமக்குக் கிடைக்கின்றன.

- ........................................................................
- ........................................................................
- ........................................................................

தஞ்சாவூரைச் சுற்றியுள்ள சோழமண்டலப்பகுதிகள் இப்பேரரசின் தலைமை இடமாக இருந்தது. நீங்கள் முன் வகுப்புகளில் அறிந்துகொண்ட பல்லவ அரசர்களிடம் இருந்து தான் சோழ அரசர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். அந்தக் காலகட்டத்தில் தென் னிந்தியாவின் பெரும் பகுதி களும் சோழ அரசர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இது சமூகப் பொருளாதார நிலைகளில் ஒரு நிலையான தன்மையை அடைய உதவியது.




மேலே கொடுக்கப்பட்டுள்ள நிலப் படத்தை ஆராய்ந்து இன்றைய தென்னிந்தியாவின் எந்தெந்தப் பகுதிகளெல்லாம் சோழப் பேரரசில் உட்பட்டிருந்தது என்பதைக் கண்டறிந்து அட்டவணைப்படுத்துக.

சோழப் பேரரசின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக அமைந்த நதி எது என்பதை நிலப்படத்தில் இருந்து கண்டுபிடிக்க இயலுமா? நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு நதி எவ்வாறெல்லாம் உதுவுகிறது?

### தமிழகத்தின் நெற்களஞ்சியம்

தமிழ்நாட்டின் மத்தியப் பகுதியில் அமைந்த ஒரு பரந்த நிலப்பகுதியாகும் தஞ்சாவூர். நதிகளாலும் கால்வாய்களாலும் சூழ்ந்த இந்நிலப் பகுதி வேளாண்மைக்கு உகந்த பகுதியாக மாறியது. நெல் வயல்களும், தென்னை, வாழை, பலா ஆகியவற்றின் தோட்டங்களும் அதிகமாக அமைந்துள்ளதால் இப்பகுதி தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது.

நீங்கள் கண்டறிந்ததன்படி காவிரி நதியின் பள்ளத்தாக்கில் தான் சோழப் பேரரசு அமைந்திருந்தது. அதனால்தான் அப்பகுதி பல்வகை வளங்கள் நிறைந்ததாக இருந்தது. மக்களின் முக்கியமான தொழில் வேளாண்மையாக இருந்ததால் பெரும்பான்மையான மக்கள் கிராமங்களில் வசித்தனர். அங்கே அவர்கள் உணவுப் பயிர்கள், பழவகைகள், பயிறு வகைகள், கரும்பு, வெற்றிலை, பாக்கு, இஞ்சி, மஞ்சள், பல்வேறு வகையான பூக்கள் போன்றவற்றைப் பயிர் செய்தனர். வேளாண்மைக்கு நீர்ப் பாசனம் தான் இன்றியமையாதது என்பதை உணர்ந்து கொண்ட ஆட்சியாளர்கள் வெவ்வேறு வகையான நீர்ப்பாசன வசதிகளை வடிவமைத்தனர். அவற்றில் குளங்கள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் மற்றும் கிணறுகள் போன்றவை உட்பட்டிருந்தன. இது தவிர நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி, தண்ணீரைச் சேமித்து அதில் இருந்து சிறு கால்வாய்கள் வெட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குத் தண்ணீர் கொண்டு சென்றனர். இயற்கையான நீரோடைகள் இல்லாத இடங்களில் மிகப்பெரியக் குளங்களை உருவாக்கி மழைக் காலத்தில் தண்ணீரைச் சேமித்தனர். நீர் வற்றிப் போகாமல் பாதுகாக்கப்பட்ட இத்தகைய நீர் தேக்கங்கள் "ஏரிப்பட்டி" என்று அழைக்கப்பட்டன. மேலும் வேளாண்மையின் வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு வரிச்சலுகைகள் கொடுத்தும், தரிசு நிலங்களை வேளாண்மைக்கு உகந்த நிலங்களாக மாற்றுவதற்கு ஊக்கமளிக்கவும் செய்தனர். கோவில்களுக்கும் பிராமணர்களுக்கும் பூமிதானம் செய்வதன் மூலம் அதிக பகுதிகளில் வேளாண்மை பரவ வழிவகுத்தது. ஆனால் இத்தகைய நிலங்களில் வேளாண்மை செய்த விவசாயிகள் அடிமைகளைப் போல் வசித்து வந்தனர்.



ஏரிப்பட்டி

சோழப் பேரரசின் பொருளாதாரத்தில் விவசாயத்துறை ஆற்றிய பங்கினைப் பகுப்பாய்வு செய்யுங்கள்.

விவசாய முன்னேற்றத்தின் மூலம் கிடைக்கப்பெறும் உபரி உற்பத்தி வணிகத்திற்கு வழிவகுக்கும் என்று முன் வகுப்புகளில் நாம் விவாதித்தோம் அல்லவா? சோழப் பேரரசில் உள்நாட்டு வாணிபமும் தொலைதூரக்

கடல் வாணிபமும் வளர்ச்சியடைந்திருந்ததாக அக்காலக் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. உள்ளூர் சந்தைகளில் ஏராளமான உற்பத்திப் பொருட்கள் விற்கப்பட்டிருந்தன. நெசவு ஒரு முக்கியமான தொழிலாக இருந்தது. அக்காலத்தில் நெசவாளர்களின் சங்கங்களும் இருந்தன. வட இந்தியாவிற்கும் பிற இடங்களுக்கும் சிறந்த துணிகளை ஏற்றுமதி செய்தனர். கரும்பும் ஒரு முக்கிய வணிகப் பொருளாக இருந்தது. விவசாயம் தவிர உலோக வேலையும் வளர்ச்சி அடைந்திருந்தது. கோவில்களில் காணப்படும் சிலைகளும் பாத்திரங்களும் இதற்கு சான்றுகளாகும். தங்கம், வெள்ளி போன்றவற்றைப் பயன்படுத்தி ஆபரணங்கள் தயாரிப்பதும் இரும்பைப் பயன்படுத்தி இரும்புக் கருவிகள் தயாரிப்பதும் முன்னேற்றம் அடைந்திருந்தது. கடற்கரையிலிருந்து முத்தும் பவளமும் சேகரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். 11–ஆம் நூற்றாண்டில் கம்போடியாவிலிருந்து ஒரு வணிகக் குழு சோழ நாட்டிற்கு வருகை தந்தது. நாகப்பட்டினம், மகாபலிபுரம், காவேரிப் பூம்பட்டினம், சாலியூர், கொற்கை ஆகியவை அக்காலத்தில் முக்கிய கடற்கரை வாணிப மையங்களாக இருந்தன. இன்றைய விசாகப்பட்டின துறைமுகம் அமைந்துள்ள இடம் "குலோத்துங்க சோழப் பட்டணம்" என்று அழைக்கப்பட்டிருந்தது. குலோத்துங்க சோழன் சோழ நாட்டின் ஆட்சியாளராக இருந்தார். நகரத்தார், மணி கிராமம் போன்ற செல்வச் செழிப்பான வாணிபக் குழுக்கள் வாணிபத்தை வலுவடையச் செய்தன.




சோழர்களின் வாணிப வலையமைப்பு

வரைபடத்தை உற்றுப் பார்த்துச் சோழப்பேரரசு எந்தெந்த நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது என்பதைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்.

சோழர்களின் தலைநகரமாக இருந்த தஞ்சாவூரில் நிலைபெற்றிருக்கும் உலகப் புகழ்பெற்ற கோவில் எதுவென்று தெரியுமா? இது இராஜராஜ சோழனின் (985 -1014) காலத்தில் கட்டப்பட்ட பிரகதீஸ்வரர் கோவிலாகும். அவரது வாரிசான முதலாம் இராஜேந்திர சோழனின் (1014-1044) காலத்தில்தான் கங்கைகொண்ட சோழபுரத்தில் கோவில் கட்டப்பட்டது. அக்காலத்து கோவில்களும் மிகவும் செல்வச் செழிப்புடன் இருந்தன. கருவூலங்கள்தான் மன்னர்களைக் கோவில்கள் கட்டத் தூண்டியது. தானமாகக் கிடைத்த நிலத்தின் வருமானம், கிராமசபையில் இருந்து கிடைக்கும் நன்கொடைகள், வரி பிரிப்பதற்கு உரிமை உள்ள நிலத்திலிருந்து வசூலிக்கப்படும் வரிகள், பக்தர்களின் நன்கொடைகள், கிராமங்களின் நிதி பரிவர்த்தனைகளை நடத்தும் நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதிகள் கோவில்களின் வருமான வழிகளாக இருந்தன. கோவில்களோடு சேர்ந்து கல்வி நிறுவனங்களும் மருத்துவமனைகளும் செயல்பட்டு வந்தன. கோவில்களின் கட்டுமானம், அவற்றின் பராமரிப்பு போன்றவற்றால் ஏராளமானோருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கப்பெற்றது. கைவினைக் கலைஞர்களும் கைத் தொழிலாளர்களும் அன்றாட வாழ்க்கைக்காகக் கோவில்களைச் சார்ந்து இருந்தனர்.



### பிரகதீஸ்வரர் கோவில்

தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் அமைந்துள்ள ஒரு முக்கியமான வரலாற்று நினைவுச் சின்னம் பிரகதீஸ்வரர் கோவில் அல்லது இராஜராஜேஸ்வரர் கோவில் ஆகும். இது தஞ்சை பெரிய கோவில் என்றும் அழைக்கப்படுகின்றது. சிவகங்கை கோட்டையால் சுற்றப்பட்டுதான் இது அமைந்துள்ளது. சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய இரண்டு பெரிய கோபுரங்கள் இதனுடைய நுழைவுவாயில்களாகும். பிரதிஷ்டையின் மேலுள்ள விமானத்திற்கு (கோபுரத்திற்கு) பதிமூன்று அடுக்குகள் உள்ளன. யுனெஸ்கோ இக்கோவிலை உலக பாரம்பரிய மையமாக அறிவித்துள்ளது.

சோழப்பேரரசின் சமூகப் பொருளாதார வாழ்க்கையில் கோவில்கள் ஆற்றிய பங்கினை மதிப்பிடுக.

நமது அண்டை நாடான இலங்கையுடன் சோழ அரசர்கள் வணிகத் தொடர்பு வைத்திருந்ததை நீங்கள் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? இலங்கையில் அவர்கள் வாணிப உறவுகளை மட்டுமல்லாது ஆட்சியையும் நிலை நாட்டியிருந்தனர். சோழர்களின் கல்வெட்டுகளும் மகாவம்சம், சூள வம்சம் போன்ற இலங்கை படைப்புகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. சோழர்களின் ஆட்சிக் காலத்தில்தான் தென்கிழக்கு ஆசியாவுடன் தென்னிந்தியாவிற்கு வலுவான தொடர்பும் நட்புறவும் ஏற்பட்டது. சுமத்ரா, ஜாவா, மலேசியா போன்ற இடங்களுக்குச் சோழநாட்டிலிருந்து வணிகர்கள் மட்டுமின்றி பௌத்த–இந்து மதத் துறவிகளும் அறிஞர்களும் அதிகமாகப் பயணம் செய்திருந்தனர். இந்தப் பயணங்கள் மூலமாக சோழ நாட்டினுடைய மொழி, மதம், கருத்துக்கள், கட்டிடக்கலைகள் போன்றவை மேற்குறிப்பிட்ட நாடுகளுக்குப் பரவக் காரணமாயின.



**கங்கைகொண்ட சோழபுரம்**

தமிழ்நாட்டிலுள்ள கும்பகோணத்திலிருந்து 36 கிலோ மீட்டர் வடக்காக கங்கைகொண்ட சோழபுரம் என்ற சோழர்களின் பிற்காலத் தலைநகரம் அமைந்துள்ளது. இராஜேந்திர சோழன் தான் தஞ்சாவூரில் இருந்து தலைநகரைக் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றினார். கங்கை நதியைக் கடந்து வட இந்தியாவிற்கு இவர் நடத்திய படையெடுப்பின் நினைவாகத்தான் இந்தப் பட்டணத்தையும் கோவிலையும் நிறுவினார்.

**சோழஏரி**

வங்காள விரிகுடா கடலைச் சுற்றியுள்ள பகுதிகளில் சோழர்கள் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்டினர். வங்காள விரிகுடா கடலில் சோழர்களின் கடற்படை ஆதிக்கம் நிலை பெற்றிருந்தது. அதனால் வங்காள விரிகுடா கடலை 'சோழ ஏரி' என்று அழைத்தனர்.

தென் இந்திய கலாச்சாரத்தையும் தமிழ் மொழியையும் தென்கிழக்கு ஆசியாவிற்கு பரப்புவதில் சோழர்கள் ஆற்றிய பங்களிப்பையும் அவை தென்கிழக்கு ஆசிய மக்களின் வாழ்க்கையில் செலுத்திய தாக்கத்தையும் குறித்து விவாதிக்கவும்.

## சோழர் ஆட்சி

சோழப் பேரரசின் முக்கியமான அரசர்களைக் குறித்து நாம் தெரிந்து கொண்டோம் அல்லவா? அரசருக்கு ஆட்சியில் உதவி புரிவதற்கு அமைச்சர்களின் குழு ஒன்று இருந்தது. கடற்படை உட்பட வலிமையான ஒரு படையும் சோழர்களுக்கு இருந்ததாக 13–ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை புரிந்த வெனிஸ் பயணியான மார்க்கோபோலோ குறிப்பிடுகின்றார். நாட்டை ஆட்சி வசதிக்காக மண்டலங்கள், வளநாடு, நாடு என்று பிரித்திருந்தனர். வியாபாரத்தின் வளர்ச்சிக்காகவும் ராணுவத்தின் போக்குவரத்திற்காகவும் ஆட்சியாளர்கள் பல்வேறு பாதைகளை உருவாக்கினர். நிலவரி மட்டுமின்றி காடுகள், சுரங்கங்கள், உப்பு போன்றவற்றின் மீதும் வரி விதிக்கப்பட்டிருந்தது. விற்பனை வரியும் தொழில் வரியும் பிரித்திருந்தனர். "வெற்றி " என்ற பெயரில் அறியப்படும் ஊதியம் இல்லாத உழைப்பினையும் வரிக்குச் சமமாகக் கருதினர்.

சோழர்களின் கிராம சுயாட்சியைக் குறித்து ஏராளமான அக்காலக் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. உத்திரமேரூர் கல்வெட்டுகள் அவற்றில் மிக முக்கியமானதாகும். ஊர், சபை என்ற பெயரில் இரண்டு சபைகள் அக்காலத்தில் இருந்தன. இவற்றிற்குச் சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.




குளங்கள், கிணறுகள், சாலைகள் போன்றவற்றைப் பராமரிப்பது உள்ளாட்சிகளின் பொறுப்பாகும். ஆனால் முன் வகுப்புகளில் நீங்கள் தெரிந்து கொண்ட நில உடமை முறையின் வளர்ச்சி இச்சபைகளின் செயல்பாட்டினைக் குறைத்தது.

சோழப் பேரரசினுடைய சமூகம் ஒரு சமத்துவத் தன்மையுடைய சமூகமாக இருக்கவில்லை. ஜாதி முறையும் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளும் நிலவி இருந்தன. பிராமணர்கள் சமூகத்தில் மிக உயர்ந்த பிரிவினராகக் கருதப்பட்டனர். சொந்தமாக விவசாயநிலம் இல்லாத ஏராளமான விவசாயிகளும் அடிமை வேலை செய்பவர்களும் இருந்தனர்.

நவீன காலத்து ஆட்சி முறையுடன் ஒப்பீடு செய்யும் பொழுது சோழர்களின் ஆட்சி எவ்வளவு திறமையானதாக இருந்தது என்பதை மதிப்பீடு செய்க.

## சாளுக்கியர்கள்

கர்நாடகத்தில், வாதாபியில் உள்ள (பதாமி) பாறைகளைக் குடைந்து உருவாக்கிய கோவிலின் படம்தான் கொடுக்கப்பட்டுள்ளது. C.E ஆறாம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை தென்னிந்தியாவிலும் தக்காணத்திலும் ஆட்சி செய்திருந்த சாளுக்கியர்களால் இது உருவாக்கப் பட்டது. சமண – சைவ – வைணவச் சிலைகள் இந்தக் கோவில்களில் இருந்தன.



வாதாபியில் உள்ள கோயில்


விருபாக்ஷகோவில் – பட்டடக்கல்

அக்காலத்தில் சாளுக்கியர்கள் அதிகமான கோவில்களைக் கட்டினர். துவக்கத்தில் பாறைகளைக் குடைந்து குகைக் கோவில்களைக் கட்டினார்கள். பின்னர் கட்டமைக்கப்பட்ட கோவில்களைக் (structured temples) கட்டினர். கர்நாடகத்தின் ஐஹோளிலுள்ள மெகுட்டி சமணக் கோவிலும் பட்டக்கையிலுள்ள விருபாக்ஷ கோவிலும் சாளுக்கியர்களின் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டுக்களாகும். கோவில்களின் மேற் கூரைகளைத் தாங்கி நிற்கும் தூண்களில் சிற்பங்களைச் செதுக்கி வைத்திருப்பதையும் காண முடியும்.

சாளுக்கியர்களின் கோவில்கள் குப்தப்பாணியிலிருந்து உருவானதென்றாலும் அவற்றில் தென்னிந்தியாவின் வட்டார பாரம்பரிய பாணியான திராவிட பாணியைக் காணலாம். பாறைக்கற்களைக் கொண்டு உருவாக்கப்படுவதுதான் திராவிட வாஸ்து கட்டிடக்கலையின் சிறப்பம்சம் ஆகும். சஹ்யி மலையிலிருந்தும் தக்காண பீடபூமியிலிருந்தும் போதுமான பாறைகள் கிடைத்திருந்தன. திறமையான சிற்பிகள் பாறைகளைப் பயன்படுத்தி அழகிய கோவில்களை வடிவமைத்தனர்.

தென்னிந்தியாவின் புவியியல் சிறப்பம்சங்கள் சாளுக்கியர்களின் கோவில் கட்டமைப்பில் எவ்வாறு தாக்கத்தைச் செலுத்தின?

இவ்வளவு கோவில்கள் கட்டுவதற்குச் சாளுக்கிய அரசர்களால் எவ்வாறு முடிந்தது என நீங்கள் சிந்தித்ததுண்டா? வளங்கள், தொழிலாளிகள், செல்வம் ஆகிவற்றை எப்படியெல்லாம் இவர்கள் திரட்டியிருப்பார்கள்?

கோவில்கள் கட்டுவதற்குத் தேவையான பாறைகள் கிடைத்திருந்ததைக் குறித்து ஏற்கனவே நாம் விவாதித்தோம் அல்லவா? வளமான நீர்ப்பிடிப்புள்ள தக்காணப் பகுதியிலுள்ள விவசாயத்திலிருந்து அவர்கள் தேவையான செல்வங்களைச் சேகரித்தனர். கிருஷ்ணா, கோதாவரி ஆற்றுப் படுகைகளில் உள்ள விவசாயத்தின் மூலம் உபரி உற்பத்தியைப் பெருக்கினர். உபரி உற்பத்தியின் காரணமாக வெளியிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வந்து வேலை செய்வதற்கான சூழ்நிலை உருவானது.

முன்வகுப்பில் நாம் தெரிந்துகொண்ட சோழர்களைப் போல ஒரு மையப்படுத்தப்பட்ட ஆட்சிமுறை இங்குக் காணப்படவில்லை. மாறாக கோவில்கள், பிரம்மதேய பூமியின் உரிமையாளர்களான பிராமணர்கள், சாமந்தர்கள் ஆகியோரால் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு அரசாட்சி நிலை கொண்டிருந்தது. அதனால் அதிகார மையங்களும் மாறிக்கொண்டிருந்தன. சாளுக்கியர்கள் வாதாபி, வெங்கி, கல்யாணி ஆகிய பகுதிகளை ஒருங்கிணைத்து C.E ஆறாம் நூற்றாண்டு முதல் 12–ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி நடத்தியிருந்தனர்.




நிலப்படத்தை உற்றுநோக்கி இன்றைய எந்தெந்த மாநிலங்களில் சாளுக்கியர்களின் ஆட்சி பரவியிருந்தது எனக் கண்டுபிடிக்கவும்.

ஒருங்கிணைக்கப்பட்ட வரிவிதிப்பு முறையும் மையப்படுத்தப்பட்ட அலுவலர்களின் கூட்டமும் இருந்தாலும் ராணுவ அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட பிரபுக்களை மையமாகக் கொண்டு ஆட்சி அமைந்திருந்தது. நிலையான ஒரு ராணுவம் செயல்பட்டிருக்கவில்லை. சோழ அரசர்களைப் போல அரசனுக்கு ஆட்சியில் உதவி செய்வதற்கு அமைச்சரவையும் இருக்கவில்லை. அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்களால் அதிகாரம் கையாளப்பட்டிருந்தது. இரண்டாம் புலிகேசி முக்கியமான சாளுக்கிய ஆட்சியாளர் ஆவார்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் சோழ – சாளுக்கிய ஆட்சியை ஒப்பீடு செய்யவும்.

- மைய ஆட்சி
- நிலப்பிரபுக்களின் ஆட்சி
- உள்ளாட்சி
- கோவில்களின் செல்வாக்கு



நாளந்தா பல்கலைக்கழகம்



விக்ரமஷில பல்கலைக்கழகம்



புத்த கோவில்

## திருக்கோவில்கள்

C.E ஐந்தாம் நூற்றாண்டு முதல் இந்தியாவில் நிலை கொண்டிருந்த புத்த மதத்தின் கற்றல் மையமாக இருந்த நாளந்தா பல்கலைக்கழகத்தின் படம் கொடுக்கப்பட்டுள்ளது. சீனப் பயணியான ஹுயான்சாங் உட்பட பலரும் பார்வையிட்டதும் ஆய்வு நடத்தியதுமான உலகப் புகழ்பெற்ற இவ்வறிவியல் மையம் பிற்காலத்தில் வீழ்ச்சியைச் சந்தித்தது. ஆனால் நாளந்தா பல்கலைக்கழகத்தை சீரமைத்த ஆட்சியாளர்களில் முக்கியமானவர் பால இராஜாவாக இருந்த தர்ம பாலன் ஆவார். நாளந்தாவின் செலவிற்காக இவர் 200 கிராமங்களைத் தானமாகக் கொடுத்தார். அதுமட்டுமன்றி மகதாவில் கங்கை நதிக்கரையில் குன்றின் மீது அறிவியல் வளர்ச்சிக்காக விக்ரம ஷிலா பல்கலைக்கழகத்தையும் நிறுவினார். C.E எட்டாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டின் பகுதி வரை கிழக்கிந்தியாவை (வங்காளம்) மையமாகக் கொண்டு ஆட்சி நடத்திய பாலன்மார்கள் ஏராளமான புத்தக் கோயில்களை நிறுவினார்கள்.

அவர்கள் அண்டை நாடான திபெத்துடன் நல்லுறவை ஏற்படுத்தினர். அதன் பலனாக திபெத்திலிருந்து ஏராளமான புத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் கல்வி கற்பதற்காக நாளந்தாவிற்கும், விக்ரமஷிலவிற்கும் வருகை புரிந்தார்கள். அரேபியாவின் கலிபாக்களுடனும் தென்கிழக்கு ஆசியாவுடனும் பாலன்மார்கள் நல்லுறவை வளர்த்தனர். இப்பகுதிகளிலுள்ள வணிகத் தொடர்பினால் பாலராட்சியின் பொருளாதாரம் மேம்பட்டது. மட்டுமல்ல, மலாயா, ஜாவா, சுமத்ரா போன்ற பகுதிகளை ஆட்சி செய்திருந்த சைலேந்திர அரசர்கள் பாலர்களின் அரண்மனைகளுக்கு ராஜதந்திர பிரதிநிதிகளை அனுப்பினார்கள்.

இந்தியப் பண்பாடும் புத்த மதமும் பரவுவதற்கான காலகட்டமாக பாலர்களின் ஆட்சிக் காலம் இருந்தது. இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு டிஜிட்டல் பதிப்பைத் தயாரித்து வழங்கவும்.

பாலன்மார்கள் ஆட்சி செய்திருந்த அதே காலகட்டத்தில் (C.E எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை) வட இந்தியாவின் மேற்கு பகுதியைப் பிரதிஹாரர்கள் ஆட்சி செய்திருந்தனர். பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குஜராத்திற்கு வருகை தந்த பாக்தாத்தைச் சேர்ந்த அல் – மசூதி, பிரதிஹார அரசர்களின் சாதனைகளைக் குறித்து விவரிக்கிறார். பிரதிஹார ஆட்சியாளர்களில் குறிப்பிடத்தக்கவர் போஜன் ஆவார். கலையையும் இலக்கியத்தையும் பிரதிஹாரர்கள்

ஊக்குவித்தனர். "காவிய மீமாம்ஸ" கற்பூர மஞ்சரி என்ற நூல்களை இயற்றிய சமஸ்கிருத கவிஞரும் நாடக ஆசிரியருமான இராஜசேகரன் பிரதிஹாரர்களுடைய அரண்மனையில்தான் வாழ்ந்திருந்தார். இன்றைய உத்திரப்பிரதேசத்தில் உள்ள கனோஜில் அவர்கள் அழகிய பல கோவில்களையும் கட்டடங்களையும் நிறுவினார்கள். எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் இந்தியாவிலிருந்து அறிஞர்களைப் பாக்தாத்திலுள்ள கலிபாவின் அரண்மனைக்கு ராஜதந்திர பிரதிநிதிகளாக அனுப்பி வைத்தனர். அவர்கள் இந்திய அறிவியலையும் கணித அறிவியலையும் அரபிய நாடுகளுக்குப் பரப்பினர். பிரதிஹாரர்கள் சிந்துவில் உள்ள அரபு ஆட்சியாளர்களோடு பகை கொண்டிருந்த போதிலும் இந்தியாவிற்கும் மேற்கு ஆசியாவிற்கும் இடையில் உற்பத்திப் பொருட்களின் பரிமாற்றமும் அறிஞர்களின் வருகையும் அடிக்கடி இந்தக் காலகட்டத்தில் நடந்திருந்தன.



தெலிகா மந்திர் – குவாலியர்
(பிரதிஹாரர் காலத்தில் கட்டப்பட்ட கோவில்)

கலை, இலக்கியத் துறைகளில் பிரதிஹாரர்களின் சாதனைகளை விவரிக்கும் ஆல்பத்தைத் தயாரிக்கவும்.

கர்நாடகாவின் குல்பர்க மாநிலத்தில் அமைந்துள்ள மால்கேத் (மன்யகேத்) கோட்டையின் படம் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் "ஷஹபாத் ஷில" என்று அறியப்படும் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டுதான் இந்த கோட்டை கட்டப்பட்டுள்ளது. அதிலிருந்தே இது மிகவும் பழமையான கோட்டை என்பதைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா?



மால்கத் கோட்டை

C.E எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டுவரை தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் ஆதிக்கம் செலுத்தியிருந்த இராஷ்டிரகூடர்களால் இந்தக் கோட்டை கட்டப்பட்டது. மூன்றாம் கோவிந்தனும் அமோக வர்ஷனும் ராஷ்டிரகூட ஆட்சியாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். அமோக வர்ஷன் கன்னட மொழியில் எழுதிய ஒரு குறிப்பிடத்தக்க நூலாகும் "கவிராஜ மார்க்கம்". மத நல்லிணக்கம் கொண்ட ராஷ்டிர கூட ஆட்சியாளர்கள் சைவ வைஷ்ணவ மதங்களுடன் சமண மதத்தையும் ஊக்குவித்தனர். முஸ்லீம் வணிகர்களுக்கு வாணிபம் நடத்துவதற்கும் நிரந்தரமாக தங்குவதற்கும் அவர்களுடைய நம்பிக்கையைப் பரப்புவதற்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தனர். இது அயல்நாட்டு வாணிபத்தை வலுப்படுத்தியது.


கைலாச கோவில் எல்லோரா

இராஷ்டிரகூடர்கள் கலையையும் இலக்கியத்தையும் ஊக்குவித்தனர்.

அரண்மனையில் சமஸ்கிருத அறிஞர்கள் மட்டுமின்றி பிற மொழிபடைப்பாளர்களும் வாழ்ந்திருந்தனர். எல்லோராவில் கல்வெட்டு கோவில்களைக் கட்டியவர்கள் இராஷ்டிரகூடர்களாவார்கள்.
இராஷ்டிரகூடர்களின் ஆட்சிக் காலத்தில் சமூகம் ஜாதியின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தது. சதுர் வர்ணத்தினர் மட்டுமின்றி பல்வேறு வேறுபாடுகளுக்கும் தீண்டாமைக்கும் உட்பட்ட பிரிவினர்களும் இருந்தனர். தச்சர்கள், செருப்பு தைப்பவர்கள், மீன் பிடிப்பவர்கள் போன்றவர்கள் இதில் உட்பட்டிருந்தனர். சமூகத்தில் அதிகாரம் படைத்த பிராமணர்களும் சத்திரியர்களும் அவர்களின் பதவியை நிலைநிறுத்திக் கொண்டனர். ஆனால் வாணிபத்தின் வீழ்ச்சியும் விவசாயத்தின் வளர்ச்சியும் வைசியர்களின் பதவிக்குச் சேதத்தையும் சூத்திரர்களின் நிலையை மேம்படுத்தவும் செய்தது. இராணுவத்தில் சேர்ந்தது சூத்திரர்களின் பதவி மேம்படக் காரணமானது.

கலை, இலக்கியம் போன்ற துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டிருந்தாலும் இராஷ்டிராகூடர்களின் ஆட்சிக்கால சமூகத்தைச் சமத்துவ சமூகமாகக் கருத இயலுமா? மதிப்பீடு செய்க.

நாம் தெரிந்து கொண்ட இந்த மூன்று நாடுகளும் தங்களுக்குள் அடிக்கடி போர்கள் நடத்தியிருந்தாலும் தங்களுடைய ஆட்சிப் பகுதிகளில் அவர்கள் ஒரு நிலையான ஆட்சியை உறுதிப்படுத்தினர். விவசாயத்துடன் கலை, இலக்கியம், கோவில் கட்டுதல் போன்றவைகளையும் ஊக்குவித்தனர்.

C.E எட்டாம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலகட்டத்தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நிலை கொண்டிருந்த வட்டாரப் பகுதிகளின் நிலைமைகளை மதிப்பீடு செய்க.

## டெல்லி சுல்தான்கள்

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நிலை கொண்டிருந்த வட்டார அரசுகளைக் குறித்தல்லவா நாம் விவாதித்தோம். C.E. 13 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் பெரும்பான்மை பகுதிகளும் டெல்லியை மையமாகக் கொண்ட ஓர் ஆட்சி முறையின் கீழ் மாற்றப்பட்டது. அதனுடைய பின்னணியையும் சிறப்பு அம்சங்களும் எவையெல்லாம் என்பதைப் பார்ப்போம். இந்தியாவுடன் அரேபியர்களுக்கு வாணிப கலாச்சாரத் தொடர்பு

இருந்தது என்பதை நாம் முன் வகுப்புகளில் புரிந்து கொண்டோம் அல்லவா? ஆனால் C.E. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரேபியர்கள் இந்திய துணைக் கண்டத்தின் மேற்குக் கடற்கரைப் பகுதியான சிந்துவை ஆக்கிரமித்தனர். இந்தியாவின் செல்வமும் அரேபியர்களின் வாணிக விருப்பமும் தான் இந்தப் படையெடுப்பின் அடிப்படை இலட்சியமாகும்.

### அரேபியர்களின் சிந்து படையெடுப்பு




C.E 712–இல் அரேபியர்கள் சிந்துவை ஆக்கிரமித்தனர் (படையெடுத்தனர்). உமையாத் கலிபாவின் ராணுவத் தலைவராக இருந்த முகமது பின் காசிம் இந்தப் படையெடுப்பிற்குத் தலைமை வகித்தார். கலிபாவிற்கும் ஆளுநராயிருந்த அல் – ஹஜ்ஜாஜினுக்கும் கொடுத்த வெகுமதியுடன் சிலோனில் இருந்து அரேபியாவிற்குச் சென்று கொண்டிருந்த கப்பலைச் சிந்துவிற்கு அருகில் வைத்து கடல் கொள்ளையர்கள் ஆக்கிரமித்தனர். இது அரேபியர்கள் சிந்துவின் மீது படையெடுப்பதற்கான உடனடிக் காரணமாகும்.

இந்தப் படையெடுப்பின் மூலம் இந்தியாவில் உள்ள பல்வேறு ஆட்சியாளர்களின் பலவீனத்தை மற்ற நாடுகள் தெரிந்து கொண்டன. இதைத் தொடர்ந்து துருக்கியர்களான கஜினி முகமதுவும் கோரி முகமதுவும் 11, 12– ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவை ஆக்கிரமித்தனர். கஜினி முகமது 17 முறை இந்தியாவின் மீது படையெடுத்ததாகக் கூறப்படுகின்றது. இந்தியாவில் பெருகிவரும் செல்வச் செழிப்பின் மீது அவர்களுக்கிருந்த ஆர்வத்தை இது வெளிக்காட்டுகிறது. இந்தத் தாக்குதல்களால் படிப்படியாக டெல்லியை மையப்படுத்தியுள்ள சுல்தான்களின் (டெல்லி சுல்தான்கள்) ஆட்சிக்கு வழிவகுத்தது. வட இந்தியாவும் மத்திய இந்தியாவும் தென்னிந்தியாவின் சில பகுதிகளும் சுல்தான்களின் ஆட்சியின் கீழ் இருந்தன. C.E 1206 முதல் 1526 வரை நிலை கொண்டிருந்த சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் ஐந்து இராஜ வம்சங்கள் ஆட்சி செய்திருந்தனர். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**டெல்லி சுல்தான்கள் ஆட்சி காலத்தில் உள்ள இராஜ வம்சங்கள்**

- மாம்லுக்
- கில்ஜி
- துக்ளக்
- சையது
- லோதி

இது பல ஆட்சி சீர்திருத்தங்களுக்கும் சோதனைகளுக்கும் உட்பட்ட காலகட்டமாக இருந்தது. அவற்றில் முக்கியமானது அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிக் காலத்தில் (1296-1316) நடைமுறைப்படுத்திய சந்தை கட்டுப்பாட்டு முறையாகும்.

பொதுவாக அனைத்து உற்பத்தி பொருட்களின் விலையையும் குறிப்பாக உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதே இதனுடைய முக்கிய நோக்கமாக இருந்தது. மங்கோலியர்களின் படையெடுப்பைத் தொடர்ந்து அலாவுதீன் கில்ஜி ஒரு வலுவான ராணுவத்தை உருவாக்க வேண்டியிருந்தது. ஒரு பெரிய இராணுவத்திற்கு அதிகத் தொகை சம்பளமாக நல்க வேண்டும் என்ற கவலையே இத்தகைய சீர்திருத்தத்தைச் செய்ய அவரைத் தூண்டியது. உற்பத்திப் பொருட்களுக்கு விலை குறைவாக இருந்தால் குறைந்த அளவு சம்பளம் கொடுத்தால் போதுமல்லவா? இதனுடைய ஒரு பகுதியாக அவர் தானிய கிடங்குகளை உருவாக்கவும் அதிக விலை வசூலிப்பவர்களுக்கும் பொருட்களைப் பதுக்கி வைப்பவர்களுக்கும் தண்டனைகள் வழங்கவும் செய்தார்.

**ரஸியா சுல்தானா**
**1236 – 39**

மாம்லுக் அரச வம்சத்தில் குறிப்பிடத்தக்கவராக இருந்த இல்த் துமிஷினுடைய மகள் தான் ரஸியா. அவரது காலத்திற்குப் பிறகு அரியணையில் அமர்வதற்கு ஆண் மகன்களுக்குத் தகுதியில்லை என்று எண்ணிய இல்த்துமிஷ் அவரது வாரிசாகத் தன் மகளை முன்மொழிந்தார். ஈரான், எகிப்து போன்ற நாடுகளில் பெண்கள் ஆட்சியாளர்களாக இருந்தாலும் அரியணையில் ஒரு பெண் அமர முன்மொழிவது அக்காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றமாகவே இருந்தது.




நவீன காலத்தில் அரசாங்கத்தினுடைய பொதுச் செலவையும் மக்களின் அன்றாட செலவுகளையும் குறைப்பதற்குத் தேவையான வழிகளைக் குறித்து வகுப்பில் ஒரு குழு விவாதத்தை ஏற்பாடு செய்யுங்கள்.

## சமூகப் பொருளாதார வாழ்க்கை

இந்தியாவின் வளமான மண் விவசாயத்திற்கு மிகவும் ஏற்றதாக இருந்தது என்று 14–ஆம் நூற்றாண்டில் வருகை தந்த மொரோக்கோ நாட்டுப் பயணியான இபன் பதூதா கருத்துத் தெரிவித்தார். வருடத்தில் இரண்டு அல்லது மூன்று முறை வேளாண்மை செய்திருந்ததாக அவர் குறிப்பிடுகிறார். மக்கள் தொகையில் பெரும்பான்மையினரும் விவசாயிகளாயிருந்தனர். ஆனால் தொடர்ச்சியான பஞ்சங்களும் போர்களும் விவசாயிகளை நெருக்கடிக்குள்ளாக்கியது. கரும்பு, கோதுமை, நீலம், பருத்தி, எண்ணெய் வித்துக்கள், பழங்கள், பூக்கள் போன்றவற்றை வேளாண்மை செய்திருந்தனர். இவை எண்ணெய் ஆட்டுதல், சர்க்கரை தயாரித்தல், நெசவுத் துணிகளுக்குச் சாயம் பூசுதல் போன்ற கைத்தொழில்களின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. நீர்த்தேக்கங்களில் இருந்து கால்நடைகளைப் பயன்படுத்தி சக்கரத்தைச் சுழற்றி தண்ணீரை எடுத்து நீர்ப் பாசனத்திற்குப் பயன்படுத்துகின்ற "ரஹத் நீர்ப்பாசனத் திட்டம் "நிலை பெற்றிருந்தது.



ரஹத் நீர் பாசன திட்டம்

விவசாயத் துறையின் வளர்ச்சி மட்டுமின்றி நிலையான ஆட்சி, போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி, டாங்க (வெள்ளி) , திர்கம் (செம்பு) போன்ற நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நிதிக் கொள்கை (monetary system) வியாபாரத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. ஏற்றுமதியும் இறக்குமதியும் வலிமை பெற்றிருந்தன. பளபளப்பான பட்டுத் துணிகள், கண்ணாடிகள், குதிரைகள், சீனப் பாத்திரங்கள், யானைக் கொம்புகள், நறுமணப் பொருட்கள் போன்றவை பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இந்தியாவில் இறக்குமதி செய்வதைக் காட்டிலும் ஏற்றுமதி அதிகமாக இருந்தது. அதனால் அக்காலத்தில் தங்கமும் வெள்ளியும் அதிகமாக இந்தியாவிற்குக் கிடைக்கப்பெற்றது.

வியாபாரத்தினுடைய வளர்ச்சி நகரங்களும் நகர வாழ்க்கையும் ஒருங்கிணையக் காரணமானது. டெல்லியும் தௌலதாபாத்தும் அன்றைய கிழக்கிலுள்ள பெரும் நகரங்களாக இருந்தன. வங்காளமும் குஜராத்திலுள்ள நகரங்களும் துணிகளுக்குப் பெயர் பெற்றவைகளாக இருந்தன. லாகூர், முல்தான், லக்னோ போன்ற நகரங்கள் நெரிசல் மிகுந்த நகரங்களாக இருந்தன. இவ்விடங்களில் தோல் வேலை, உலோக வேலை, தரை விரிப்பு உற்பத்தி, மர வேலைகள் போன்ற கைத்தொழில்கள் மட்டுமின்றி துருக்கியர்கள் காகிதத் தயாரிப்பையும் தொடங்கினர். நாட்டில் உள்ள நிலங்கள் முழுவதையும் இக்தாக்களாகப் பிரித்துத் துருக்கிய நிலப்பிரபுக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த இக்தாக்களில் இருந்து கிடைக்கும் நிலவரி விகிதத்தை நிலப்பிரபுக்கள் பிரித்துச் சுல்தான்களுக்குச் செலுத்தினர். வரி பணமாகப் பிரிக்கப்பட்டதால் நிதிக்கொள்கையின் தோற்றத்திற்கும் அதன் மூலம் பொருளாதார மேம்பாட்டிற்கும் வழி வகுத்தது.

**இக்தா முறை**

டெல்லி சுல்தானாக இருந்த இல்த்துமிஷின் காலத்தில் நடைமுறைப்படுத்திய ஒரு திட்டமாகும் இக்தா முறை. நாட்டைச் சிறியதும் பெரியதுமான நிலப்பகுதிகளாகப் பிரித்து அவற்றை ராணுவத்தினர், அலுவலர்கள், பிரபுக்கள் போன்றவர்களுக்குப் பிரித்துக் கொடுத்த ஒரு பூமிதானக் கொள்கையாகும். தானம் கொடுத்த நிலப்பகுதி இக்தா என்று அழைக்கப்பட்டது.

சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் தொழில் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி நாட்டின் பொருளாதாரத் துறையில் எவ்வாறெல்லாம் தாக்கம் செலுத்தியது என்பதைப் பரிசோதிக்கவும்.

சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் சமூக வாழ்க்கை எப்படி இருந்தது என்று பார்ப்போம். இடைக்கால சமூகத்தில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் நிலவியிருந்தன. சுல்தான், முக்கிய பிரபுக்கள், 'முக்தம்' என்று அழைக்கப்பட்ட கிராமத் தலைவன், குறுநிலப் பிரபுக்கள் போன்றவர்கள் சமூகத்தில் உயர்ந்த வாழ்க்கை தரத்தில் வாழ்ந்தனர். நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள பெரும்பான்மையான மக்கள் மிகவும் அவதிப்பட்டனர். ஜாதி முறையை அடிப்படையாகக் கொண்ட சமூக கட்டமைப்பில் அடிப்படையான எந்த மாற்றமும் நிகழவில்லை. பெண்களின் பதவியில் சிறிது மாற்றம் ஏற்பட்டதாகச் சிலர் கருதுகின்றனர். பெண்களின் சொத்துரிமையில் இந்த முற்போக்கான மாற்றத்தைக் காணலாம். ஆனால் ஜாதி அமைப்பு பூர்வீக குடிமக்களுக்கும் இஸ்லாம் மத விசுவாசிகளுக்கும் இடையிலான தலையீட்டைக் கட்டுப்படுத்தவில்லை. இராணுவம் மற்றும் ஆட்சியில் உள்ள தலைவர்கள் பெரும்பாலும் இந்து மத நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர்.

புராதன இந்தியாவின் சமூக வாழ்க்கையைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் சுல்தான்கள் ஆட்சிக் காலத்தில் உள்ள சமூக வாழ்க்கையோடு ஒப்பீடு செய்க.

| | புராதன இந்தியா | சுல்தான்களின் ஆட்சி |
|---|---|---|
| ஜாதி முறை | ........................................................ | ........................................................ |
| பெண்களின் பதவி | ........................................................ | ........................................................ |



## கலாச்சார வாழ்க்கை

உங்களுக்குப் பழக்கமுள்ள சில இசைக் கருவிகளின் படங்கள்தான் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் பெயர்களைக் கண்டுபிடிக்க இயலுமா? டெல்லி சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் தான் இந்த இசைக்கருவிகள் இந்தியாவிற்கு வந்தன. இவ்விதமாகச் சுல்தான் ஆட்சிக் காலம் இந்திய கலாச்சார வாழ்க்கையில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. சுல்தான்களின் ஆட்சி இந்தியாவின் பல பகுதிகளிலும் மக்கள் வாழ்வின் பல நிலைகளிலும் பல்வேறு முறைகளில் தாக்கம் செலுத்தியிருந்தது. மட்டுமல்ல இது திடீரென்று நிகழ்ந்தது அல்ல. மாறாக நீண்டகால பரஸ்பர தொடர்பின் மூலமாக இரண்டு கலாச்சாரங்களுடையவும் இணைவு உருவானது. அதில்

சில நேரங்களில் ஏற்றத்தாழ்வுகளும் நிகழ்ந்துள்ளன. இசையைத் தவிர கட்டடக்கலை, இலக்கியம் போன்ற துறைகளிலும் இந்தத் தாக்கத்தைக் காணலாம். டெல்லியில் உள்ள குதுப்மினார், துக்ளகாபாத் கோட்டை, ஹோஸ்காஸ் வளாகம், லோதி பூந்தோட்டம் என்பவை கட்டடக்கலை நன்கொடைக்குச் சில எடுத்துக்காட்டுகளாகும்.


குதுப்மினார்


துக்ளகாபாத் கோட்டை


ஹோஸ் காஸ் வளாகம்


லோதி பூந்தோட்டம்

இக்காலத்தில் அரேபிய மொழியில் பல்வேறு நூல்கள் எழுதப்பட்டன. இந்தியாவிலிருந்து சில அறிவியல், சோதிட நூல்களும் அரேபிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. துருக்கியர்களின் வருகையால் பாரசீக மொழி இந்தியாவிற்குள் வந்தது. பாரசீக மொழியில் அழகான படைப்புகளை உருவாக்கிய படைப்பாளராக இருந்தவர் அமீர் குஸ்ரு. இக்காலத்தில் வரலாற்று நூல்களை எழுதுவதும் ஒரு முக்கியத்துறையாக வளர்ந்து வந்தது. ஸியாவுதீன் பரானி சுல்தானுடைய ஆட்சி காலத்தில் இந்தியாவில் வாழ்ந்திருந்த புகழ்பெற்ற ஒரு வரலாற்று ஆசிரியர் ஆவார்.

## உருது மொழியும் அமீர் குஸ்ரும்

டெல்லியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மக்களின் பேச்சு மொழியாக இருந்த ஹிந்தாவினுடையவும் வெளிநாட்டு மொழியான பாரசீகத்தினுடையவும் கலவையால் உருது மொழி உருவானது. உருது மொழியின் வளர்ச்சிக்கு இடைக்கால இந்தியாவில் வாழ்ந்திருந்த புகழ்பெற்ற கவிஞரான அமீர் குஸ்ரு முக்கிய பங்கு வகித்தார். இந்தியாவைக் குறித்து அவர் ஒருமுறை குறிப்பிட்ட வார்த்தைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இரண்டு காரணங்களுக்காக நான் இந்தியாவை நேசிக்கிறேன். முதலாவதாக இந்தியா எனது தாய்நாடு ஆகும். தாய் நாட்டை நேசிப்பது என்பது ஒவ்வொரு மனிதனுடையவும் நம்பிக்கையின் பகுதியாகும். இரண்டாவதாக இந்தியா ஓர் அழகான நாடாகும். இங்குள்ள காலநிலை குராசனை விட அழகானது. ஆண்டு முழுவதும் பூக்களும் பசுமை நிறைந்த இயற்கை அமைப்பும் கொண்டதாகும்.

சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கலாச்சார நன்கொடைகள் இன்றைய இந்தியாவின் கலாச்சாரத்தில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதைக் குறித்து ஒரு விவாதம் நடத்தவும்

குப்தர் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்தியாவில் ஆட்சி ரீதியாக ஒரு குறிப்பிடத்தக்க தலையீடு தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் நடந்தன. இவ்விடங்களில் சிறு நாடுகளுக்குப் பதிலாக பெரிய அரசுகள் தோன்றின. வட்டார கலாச்சாரங்கள் வலிமை பெற்றன. தனிமனித மேலாட்சி இல்லாத ஓர் அரசாட்சி தோன்றியது. எட்டாம் நூற்றாண்டில் அரேபியர்கள் சிந்துவைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இந்தியாவிற்குள் துருக்கியர்கள் நுழையவும் சுமார் 300 ஆண்டுகள் இந்தியா டெல்லி சுல்தான்களின் ஆட்சியின் கீழ் இருக்கவும் செய்தது. அக்காலத்தில் இந்தியா ஒருங்கிணைந்ததும் நிலையானதுமான ஆட்சிக்குச் சான்றாக அமைந்தது. இது கலாச்சார பரிமாற்றத்திற்கும் ஒருங்கிணைப்பிற்கும் உள்ள காலகட்டமாக இருந்தது.

சுல்தான்களின் ஆட்சி இந்தியாவின் ஆட்சி சீர்திருத்தத்திலும் கலாச்சார வாழ்விலும் செலுத்திய தாக்கத்தைக் குறித்து வகுப்பில் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்யுங்கள்.

## தொடர் செயல்பாடுகள்

- இந்தியாவில் கட்டடக்கலைத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களையும் தாக்கங்களையும் காண்பிக்கின்ற ஒரு டிஜிட்டல் பதிப்பைத் தயார் செய்க.
- தென்னிந்தியாவின் முக்கிய அரச வம்சங்களையும் டெல்லி சுல்தான்கள் கால நிலப் படங்களையும் உட்படுத்தி ஒரு டிஜிட்டல் அட்லஸ் தயாரிக்கவும்.
- சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் கலாச்சாரத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குகின்ற ஒரு டிஜிட்டல் விளக்கக்காட்சி (பிரசன்டேஷன்) தயாரித்து வகுப்பில் வெளியிடவும்.



# 7 நிறுவனங்கள் வழியாக மக்களாட்சிப் பரவல்


THE CONSTITUTION OF INDIA

PREAMBLE

WE, THE PEOPLE OF INDIA,
having solemnly resolved to constitute India into a
SOVEREIGN SOCIALIST
SECULAR DEMOCRATIC REPUBLIC
and to secure to all its citizens:
JUSTICE, social, economic and political;
LIBERTY of thought, expression,
belief, faith and worship;
EQUALITY of status and of opportunity;
and to promote among them all
FRATERNITY assuring the dignity of the
individual and the unity and
integrity of the Nation;
IN OUR CONSTITUENT ASSEMBLY
this twenty-sixth day of November, 1949, do
HEREBY ADOPT, ENACT AND GIVE TO
OURSELVES THIS CONSTITUTION.



மக்களாட்சி ஓர் ஆட்சி முறை என்பதற்கு மேல், குடிமக்களின் பல்வேறு தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதிலும் அதன் வழியாக கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்கு உறுதியளிக்கும் அமைப்புமாகும். இந்தியாவில் ஜனநாயகத்தின் நிலை நிற்பிற்கும் அது எல்லா இடங்களுக்கும் பரவுவதற்குமாக அரசியல் அமைப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன.

## கல்வி கற்பதற்கான உரிமையை உறுதிப்படுத்தும் தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆணையம்

மத்தியப் பிரதேசம் : பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக அதிக கல்வி நிலையங்களைத் தொடங்குவதற்குப் பரிந்துரை செய்வோம் என்று தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் செய்தியாளர் சந்திப்பில் கூறியது. இப்பிரிவினரின் பொருளாதாரப் பின்னடைவிற்குத் தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஆணையம் அறிவித்தது.

## தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள்:

புதுடெல்லி: நாட்டின் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி பிரிவினரின் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையமும் தேசிய பழங்குடியினர் ஆணையமும் அறிவித்துள்ளது. இப்பிரிவினரைச் சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு வாழ்விடங்கள் உட்பட்ட அடிப்படை வசதிகளும் கல்வி வசதிகளும் வெகு விரைவாகக் கிடைப்பதற்குப் பாதுகாப்புச் சலுகைகளும் பரிந்துரைகளும் மேற்கொள்ளப்படும் என ஆணையம் அறிவித்துள்ளது.

## மனித உரிமை மீறல் : ஆணையம் வழக்குப் பதிவு செய்தது

புதுடெல்லி: தொழில்துறையில் நடந்து வரும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தேசிய மனித உரிமை ஆணையம் தன்னிச்சையாக வழக்குப் பதிவு செய்தது. பல்வேறு செய்தித்தாள்களில் இது தொடர்பாக வந்த செய்திகளின் அடிப்படையில் தான் ஆணையம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## மகளிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தவிர்க்க இயலாதது :

புதுடெல்லி: பெண்களுக்கு எதிராக பெருகி வரும் வன்முறைகளைத் தடை செய்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மகளிர் பாதுகாப்புச் சட்டங்களைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யப்படும் என்று தேசிய மகளிர் ஆணையம் அறிவித்துள்ளது.

## பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டது

புதுடெல்லி: பதினெட்டாவது பாராளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஏழு நிலைகளாகத் தேர்தல் நடத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதற்கு முன்னோடியாக வாக்காளர் பட்டியல் சீரமைக்கும் பணிகள் உட்படயுள்ள பல்வேறு நடவடிக்கைகளைத் தேர்தல் ஆணையம் ஆரம்பித்தது.

## சிறுபான்மையினரின் உரிமை பாதுகாப்பு: ஆணையம் தலையீடு

புதுடெல்லி: சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளில் தேசிய சிறுபான்மையினர் ஆணையம் கவலையைத் தெரிவித்தது. மதம்–மொழி கலாச்சார சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கானப் பரிந்துரைகளையும் ஆணையம் முன்வைத்தது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்புகளில் மக்களாட்சி நிறுவனங்களை நிலை நிறுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு அமைப்புகளைக் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை எவையெல்லாம் என்று கண்டுபிடிக்கவும்

- தேசிய சிறுபான்மையினர் ஆணையம்
- 
- 
- 
- 

மேற்குறிப்பிட்ட அமைப்புகளை அரசு சார்ந்த நிறுவனங்கள் என்றும் அரசு சாரா நிறுவனங்கள் என்றும் இரண்டாக வகைப்படுத்தலாம். அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட போதே உருவாக்கப்பட்ட சுயாட்சி அமைப்புகளே, அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகும். அரசியலமைப்பு நிறுவனங்களுடைய அதிகாரத்தின் உறைவிடம் அரசியலமைப்பாகும். இந்நிறுவனங்களின் அதிகாரம், கட்டமைப்பு போன்றவற்றில் மாற்றம் கொண்டு வரவேண்டுமென்றால் அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஆனால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்

சட்டங்களின்படி உருவானவைதான் அரசு சாரா நிறுவனங்கள். இவற்றிற்குப் பின்னர் தேவைக்கேற்ப அரசியலமைப்பின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவதுண்டு.

அரசியலமைப்பின் அடிப்படை தத்துவமான சமத்துவம், சுதந்திரம், சமூகநீதி, மதச்சார்பின்மை போன்ற கொள்கைகளை நமது நாட்டில் நடைமுறை படுத்துவதிலும் செயல்படுத்துவதிலும் இவ்வமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நாட்டின் எல்லாப் பிரிவு மக்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு இந்நிறுவனங்கள் ஜனநாயகத்தின் அடிப்படை குறிக்கோள்களை நிறைவேற்றுகின்றன. ஒடுக்கப்பட்ட பிரிவினருடையவும் நலிவடைந்த பிரிவினருடையவும் பங்களிப்பால் மட்டுமே ஜனநாயகம் வெற்றி பெற இயலும். அதற்காக அத்தகுப் பிரிவினர்களுடைய விருப்பங்களும் இலட்சியங்களும் நியாயமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். இந்தியாவில் இந்தத் தர்மம் நிறைவேற்றுவதில் அரசு சார்ந்த – அரசு சாரா நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலே குறிப்பிட்ட நிறுவனங்கள் எவ்வாறு மக்களாட்சியின் விரிவாக்கத்திற்கு உதவி புரிகின்றன என்பதைப் பரிசோதிக்கலாம்.

## தேர்தல் ஆணையம்




தேர்தலோடு தொடர்புடைய சில படங்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் படங்கள் என்னென்ன செயல்பாடுகளைக் குறிப்பிடுகின்றன.

- வாக்களிப்பதற்கு வரிசையாக நிற்கின்றனர்
- 
- 




தேர்தல் ஆணையத்தின் தலைமையிடம் புதுடெல்லி

மக்களாட்சி முறையில் தேர்தல்களுக்கு முக்கியமான பங்கு உண்டு எனத் தெரியுமல்லவா? மக்களாட்சி முறையில் மக்கள் பிரதிநிதிகளும் ஆட்சியாளர்களும் அதிகாரத்தில் வருவது தேர்தல் மூலமாகும். அதனால்தான் நியாயமான பாரபட்சமில்லாத தேர்தலை உறுதிப்படுத்துவதற்குச் சுதந்திரமும் அதிகாரமும் படைத்த ஓர் அமைப்பு இன்றியமையாததாகும். இந்தியாவில் இந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்ற அரசு சார்ந்த நிறுவனமே தேர்தல் ஆணையம் (Election Commission of India).

அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 324-இன் படி 1950 ஜனவரி 25-ஆம் நாள் இந்திய தேர்தல் ஆணையம் நடைமுறைக்கு வந்தது. ஒரு தலைமை தேர்தல் ஆணையரும் இரண்டு துணை ஆணையர்களும் உட்படுவதுதான் தற்போதைய தேர்தல் ஆணையம். குடியரசு தலைவரே இவர்களை நியமிக்கிறார். ஆறு வருடங்கள் அல்லது 65 வயது வரை என்பது தான் தேர்தல் ஆணைய உறுப்பினர்களின் பதவிக் காலம். குற்றச்சாட்டுகள் மூலம் மட்டுமே தலைமை தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கம் செய்ய முடியும். மத்திய ஆட்சிப் பகுதிகளிலும் மாநிலங்களிலும் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பது தலைமை தேர்தல் அதிகாரிகள் ஆவர்.

### மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM)

உலகத்திலேயே மிகப்பெரிய ஜனநாயக செயல்பாடுதான் இந்திய தேர்தல் . தேர்தல் செயல்பாடுகள் கூடுதல் வெளிப்படையாகவும் தேர்தல் குற்றச் செயல்பாடுகளைத் தடை செய்வதற்கும் தேர்தல் ஆணையம் நடைமுறைப்படுத்திய ஏற்பாடே மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் (Electronic voting machine). 1982–இல் கேரளாவில் பரவூர் சட்டமன்றத் தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் தான் முதன் முதலாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பரிசோதிக்கப்பட்டது. 2004 - இல் பாராளுமன்ற தேர்தலில் 543 தொகுதிகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் உபயோகிக்கப்பட்டது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் கட்டுப்பாட்டுக் கருவி (Control unit) வாக்குப்பதியும் கருவி (Ballot unit) என்ற இரண்டு யூனிட்டுகள் உள்ளது. ரகசியத்தை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பரிசோதனை பேப்பர் ஆடிட் ட்ரையல் (VVPAT-Voter Verified Paper Audit Trial) முறையும் உட்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல் செயல்பாட்டினை விரைவாக நடத்துவதற்கும் முடிவுகளை விரைவில் அறிவிப்பதற்கும் தேர்தல் செலவுகளைக் குறைப்பதற்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் உதவுகிறது.

மக்களாட்சியின் அமைப்பிற்காக உருவாக்கப்பட்ட அரசு சார்ந்த நிறுவனம் என்ற முறையில் தேர்தல் ஆணையம் சில முக்கியமான பொறுப்புகளை ஆற்றுகின்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ள உரையாடலைக் கவனிக்கவும்.




### அரசியல் குற்றச்சாட்டு (Impeachment)

அரசியலமைப்புப் பதவிகளில் இருக்கும் நபர்களை அந்தப் பதவிகளிலிருந்து பாராளுமன்ற நடவடிக்கை முறைகளின் படிபதவி நீக்கம் செய்யும் செயலே அரசியல் குற்றச்சாட்டு (Impeachment) ஆகும்.

நமது நாட்டில் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதும் வாக்காளர்களுக்கு அடையாள அட்டை கொடுப்பதும் தேர்தல் ஆணையமே என்பதை உரையாடலிலிருந்து தெளிவானதல்லவா? வேறு என்னென்ன பொறுப்பையெல்லாம் தேர்தல் ஆணையம் செயல்படுத்த வேண்டியுள்ளது என்பதை நாம் பரிசோதிப்போம்.

## தேர்தல் ஆணையத்தின் பொறுப்புகள்

- வாக்காளர் பட்டியல் தயாரித்தல், அடையாள அட்டை கிடைக்கச் செய்தல்.
- குடியரசு தலைவர், துணைக் குடியரசு தலைவர், மக்களவை, மாநிலங்களவை, மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்குரிய கண்காணிப்பு, நடத்துதல், கட்டுப்படுத்துதல்.
- தேர்தல் நடத்தை விதிமுறைச்சட்டத்தை அறிவித்தலும் நடைமுறைப்படுத்துதலும்
- அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தலும் சின்னம் அனுமதித்தலும்
- தேர்தல் அறிவிப்பு வெளியிடுதல், வேட்புமனுக்களைப் பெற்றுக்கொள்ளுதல், மனுக்களைப் பரிசீலனை செய்தல், வேட்பு மனுக்களை அங்கீகரித்தல், வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்.
- வாக்குப்பதிவு, வாக்கு எண்ணல் தேதிகளைத் தீர்மானித்தல், தேர்தல் முடிவுகளை வெளியிடுதல், தேர்தல் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்.
- தேர்தல் செலவுகளைப் பரிசோதித்தலும் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.

தேர்தல் ஆணையத்தின் பொறுப்புகள், கடமைகள் போன்றவற்றைச் செயல்படுத்துவதற்கு விரிவானதும் சிக்கலானதுமான தேர்தல் முறைகளைப் பொறுப்புடனும் கூட்டான மக்களின் பங்களிப்புடனும் நிறைவேற்றுவதற்கு நமது நாட்டில் தனித்துவம் வாய்ந்த சட்டங்கள் உள்ளன. 1950, 1951–லும் உள்ள மக்கள் பிரதிநிதி சட்டங்கள் இந்தப் பணிகளைத்தான் செயல்படுத்துகின்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 327–ஆம் பிரிவின்படி இச்சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. தேர்தல் முறை குறித்து விரிவாக இச்சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. வேட்பு மனுக்களைப் பெற்றுக்கொள்வது முதல் தேர்தல் முடிவுகள் வெளியிடுவது வரையுள்ள எல்லா நிலைகளும் இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. நாம் இந்தச் சட்டங்களைக் குறித்துத் தெரிந்து கொள்வோம்.

## மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் –1950 (Representation of People Act - 1950)

### தேசிய வாக்காளர் தினம் (National Voters Day)

ஜனவரி 25 தேசிய வாக்காளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. 2011 முதல் தான் இத்தினத்தைக் கொண்டாடத் தொடங்கினர். 1950 ஜனவரி 25–ஆம் தேதி இந்திய தேர்தல் ஆணையம் நடைமுறைக்கு வந்தது. தேர்தல் ஆணையத்தை நிறுவிய தினம் என்ற நிலையில்தான் ஜனவரி 25–ஆம் தேதி தேசிய வாக்காளர் தினமாகக் கொண்டாட தீர்மானிக்கப்பட்டது. நாட்டின் எல்லா வாக்காளர்களையும் தேர்தல் செயல்பாட்டில் முழுமையாகப் பங்கு பெறவைப்பதற்கும் வாக்காளரின் உரிமையைப் பயன்படுத்துவதற்கும் ஊக்கப்படுத்துவதற்குமே தேசிய வாக்காளர்தினம் கொண்டாடப் படுகிறது.

பாராளுமன்றத்திலும் மாநில சட்டமன்றங்களிலும் தேர்தல் நடத்தப்பட வேண்டிய தொகுதிகளைத் தீர்மானித்தலும் அவற்றின் எல்லைகளைப் புனரமைப்பு செய்வதும் வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்கான விதிமுறைகளைக் குறித்து விவரிப்பதுமே 1950–இல் வெளியிடப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம். எல்லா பாராளுமன்ற தொகுதிகளும் ஒற்றை உறுப்பினர் தொகுதி என்று இச்சட்டம் வரையறுக்கின்றது. சட்டமன்ற தொகுதிகளைப் பிரித்தல், புனரமைத்தல், தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் தேர்தல் பதிவு அலுவலர்கள் போன்றவர்களை நியமித்தல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் போன்ற பணிகளைச் செய்வதற்கு இச்சட்டம் வழி வகுக்கின்றது.

## மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் - 1951 (Representation of People Act - 1951)

இந்திய பாராளுமன்றத்திற்கும் மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடத்துவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் தகுதியையும் தகுதியின்மையையும் தீர்மானிப்பதற்கும் தேர்தல் தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்குமாக வரையறை செய்யப்பட்டுள்ள சட்டமே 1951 –இல் வெளியிடப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம். இச்சட்டத்தில் தேர்தல் தொடர்பான குற்றச் செயல்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் தகுதிகள், தகுதியின்மை போன்றவற்றைக் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்திலும் மாநில சட்டமன்றங்களிலும் உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்வதைக் குறித்தும், தேர்தல் முறையைக் குறித்தும், தலைமை தேர்தல் ஆணையர், மாவட்ட தேர்தல் அதிகாரி, தேர்தல் மேற்பார்வையாளர்கள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள் போன்றவர்களின் பொறுப்புகளும் தகுதிகளும் இந்தச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வது குறித்தும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் படி எந்த ஒரு அமைப்பும் அரசியல் கட்சியாக மாற வேண்டுமென்றால் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்ய வேண்டும். தேசியக் கட்சி, மாநிலக் கட்சி என்ற பதவிகளுக்கான நிபந்தனைகளும் தேர்தல் சின்னங்கள் கிடைப்பதற்கான நிபந்தனைகளும் இச்சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

- இந்திய தேர்தல் ஆணையர்களின் பெயர்களையும் அவர்கள் பதவி வகித்த காலகட்டங்களையும் உட்படுத்தி ஒரு டிஜிட்டல் ஆல்பம் தயாரிக்கவும்.
- தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளைக் குறித்துக் கூடுதல் தகவல்களைச் சேகரிக்கவும்.
- குடிமக்களின் வாக்குரிமையைச் செலுத்துவதற்கு வாக்குச்சாவடிக்குச் சென்று தான் வாக்களிக்க முடியுமா? வேறு ஏதேனும் வழிமுறைகளைத் தேர்தல் ஆணையம் நடைமுறைப்படுத்தியுள்ளதா? வகுப்பில் ஒரு விவாதம் நடத்தவும்.

## மாநிலத் தேர்தல் ஆணையம்

மத்திய தேர்தல் ஆணையம் மட்டுமல்லாது ஒவ்வொரு மாநிலத்திலும் மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளது. 73, 74 அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களின் படி மாநிலத் தேர்தல் ஆணையம் நடைமுறைக்கு வந்தது. அரசியலமைப்பின் 243 (K)/243 (Z A) என்ற பிரிவுகளின் படிதான் இது உருவாக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புக்கான வாக்காளர் பட்டியலைத் தயாரித்தல், தேர்தலுக்கான கண்காணிப்பும் கட்டுப்பாடும் போன்ற பொறுப்புகளை மாநில தேர்தல் ஆணையங்கள் செயல்படுத்துகின்றன. உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள உறுப்பினர்களுடைய ஒதுக்கப்பட்ட இடங்களைத் தீர்மானிப்பதும் ஆணையமாகும். கேரள மாநில தேர்தல் ஆணையம் 1993 டிசம்பர் 3 - ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது.

இந்தியாவைப் போல் பன்முகத்தன்மையில் சிறந்ததும் பொருளாதாரத்தால் உயர்ந்த மக்கள் தொகை பெருக்கம் உள்ளதுமான நாடுகளில் மக்கள் ஆட்சி முறையை நடைமுறைப்படுத்துவதில் தேர்தல் ஆணையத்திற்கு முக்கிய பங்கு உள்ளது. சமூகம், பொருளாதாரம், பாலினம் போன்ற ஏற்றத்தாழ்வுகளால் சமூகத்தின் முக்கிய நிலையில் இருந்து ஒதுக்கப்பட்ட ஏராளமான மக்கள் பிரிவுகள் நமது சமூகத்தில் இருந்தன. இத்தகைய மக்கள் பிரிவினரைத் தேர்தல் செயல்பாட்டில் பங்காளர்களாக மாற்றுவதன் மூலம் இந்திய மக்களாட்சியின் அரசியல் அடித்தளத்தை நிலை நிறுத்த வேண்டும் என்ற கடமையைத்தான் தேர்தல் ஆணையம் செயல்படுத்தியுள்ளது. நாட்டின் பல்வேறு நிலைகளில் நடைபெறும் தேர்தல்கள் வெளிப்படையாகவும் நீதிபூர்வமாகவும், நடைபெறுவதன் மூலம் இந்த அரசியலமைப்பானது மக்களாட்சி முறைப்படி வலுவானதும் பொருளுடையதாகவும் அமைகிறது.



சுகுமார் சென் இந்தியாவின் முதல் தலைமை தேர்தல் ஆணையர்

## தேசிய மனித உரிமை ஆணையம்




கொடுக்கப்பட்டுள்ள நாட்காட்டியின் தேதியைக் கவனித்தீர்களல்லவா? இந்த நாளின் சிறப்பு என்ன? என்பதைக் கண்டுபிடிக்க இயலுமா?

பள்ளியில் சமூக அறிவியல் மன்றத்தின் தலைமையில் உலக மனித உரிமை தினம் கொண்டாடப்படுவதற்கான திட்டமிடுதல் நடத்துவீர்களல்லவா? அதோடு தொடர்புடைய என்னென்ன நிகழ்வுகளையெல்லாம் திட்டமிடுவீர்கள்?

- சுவரொட்டியைக் காட்சிப்படுத்துதல்
- கருத்தரங்கு
-
-
-

போர்கள், உள்நாட்டுக் கலவரங்கள், தீவிரவாத தாக்குதல்கள் போன்ற சூழ்நிலைகளில் மனிதனின் கண்ணியமான வாழ்க்கையைச் சீர்குலைக்கும் பல்வேறு செய்திகளை உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஊடகங்களின் மூலம் நாம் தெரிந்து கொள்கிறோமல்லவா? நம்மைச் சுற்றி இது போன்ற மனித உரிமை மீறல்கள் நடப்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? இதைப் போன்ற நிகழ்வுகள் உங்கள் கவனத்திற்கு வந்ததுண்டா? ஆம் என்றால் பட்டியலிடவும்.

- குழந்தைகளுக்கு எதிரான பாகுபாடு
- பெண்களுக்கு எதிரான பாகுபாடு
-
-
-




மனித உரிமை மீறல்கள் நமது அரசியலமைப்பு உறுதி செய்துள்ள குடியுரிமைகளையும் மதிப்புகளையும் மீறுவதாகும். நமது நாட்டில் மனித உரிமை மீறல்களை இல்லாமல் செய்து குடியுரிமை பாதுகாப்பை உறுதி செய்தல் என்ற குறிக்கோளுடன் உருவாக்கப்பட்ட அமைப்பே தேசிய மனித உரிமை ஆணையம். 1993 அக்டோபர் 12–ஆம் தேதி தேசிய மனித உரிமை ஆணையம் நடைமுறைக்கு வந்தது. இதன் தலைமையிடம் புதுடெல்லி ஆகும். தலைவர் உட்பட ஆறு உறுப்பினர்கள் ஆணையத்தில் உள்ளனர். ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியோ/ தலைமை உச்ச நீதிமன்ற நீதிபதியோ இதன் தலைவராக இருப்பார். குடியரசு தலைவர் ஆணையத்தின் உறுப்பினர்களை நியமனம் செய்கிறார். மூன்று வருடங்கள் அல்லது 70 வயது வரை என்பதே ஆணையத்திலுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலமாகும்.

## மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் - 1993

மனித உரிமை பாதுகாப்பிற்கும் அது தொடர்பான செயல்பாடுகளுக்கும் தேசிய மாநில அளவில் மனித உரிமை ஆணையங்களும் நீதிமன்றங்களும் நிறுவுவதற்கு அறிவுறுத்தப்பட்டு நடைமுறைக்கு வந்த சட்டமே மனித உரிமை பாதுகாப்புச் சட்டம். 1993 செப்டம்பர் மாதம் 28–ஆம் தேதி இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம்தான் தேசிய மாநில அளவில் மனித உரிமை ஆணையங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சட்டத்தில் மனித உரிமை நீதிமன்றம், தேசிய சிறுபான்மையினர் ஆணையம், தேசிய தாழ்த்தப்பட்டோர் நல ஆணையம், தேசிய மகளிர் ஆணையம், மாநில மனித உரிமை ஆணையம் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளது. தேசிய மனித உரிமை ஆணையத்தை உருவாக்குதல், தலைவர் உட்பட்ட உறுப்பினர்களை நியமித்தல், நீக்குதல், பதவிக்காலம், ஆணையத்தின் செயல்பாடுகள், அதிகாரங்கள் போன்றவை இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணையத்தின் விசாரணை நடவடிக்கைகள் அறிக்கை சமர்ப்பித்தல், மாநில மனித உரிமை ஆணையத்தின் உருவாக்கம், செயல்பாட்டு விசாரணை நடவடிக்கைகள் போன்றவையும் இச்சட்டத்தில் விவரிக்கப்படுகின்றது. உயிருக்கும் சுதந்திரத்திற்கும் சம அங்கீகாரத்திற்கும் மதிப்பிற்குமாக அரசியலமைப்பு உறுதிப்படுத்தியதோ, இந்தியா அங்கீகரித்த உலக உடன்படிக்கைகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதுமான உரிமைகளுமே மனித உரிமைகள்.



தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைமையிடம் புதுடெல்லி

## தேசிய மனித உரிமை ஆணையத்தின் பொறுப்புகள்

- மனித உரிமை மீறல்கள் தொடர்பான புகார்களில் விசாரணை நடத்துதல்
- மனித உரிமை மீறல்கள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளுதல்
- சிறைகள், மறுவாழ்வு மையங்கள் போன்றவற்றைப் பார்வையிட்டுச் சீர்திருத்த அறிவுரைகளை நல்குதல்
- மனித உரிமை பாதுகாப்பு முறைகளின் செயல்பாடுகளையும் விளைவுகளையும் மதிப்பீடு செய்து அறிவுரைகள் நல்குதல்
- மனித உரிமை தொடர்பாக உலகளாவிய உடன்படிக்கைகள், அறிவிப்புகள் போன்றவைகளை ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- சட்ட அமலாக்க அதிகாரிகள் உட்பட்ட பொது ஊழியர்களிடமிருந்து ஏற்படும் மனித உரிமை மீறல்களும் இவற்றைத் தடை செய்வதில் ஏற்படும் குறைபாடுகளையும் பரிசோதித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

- தேசிய மனித உரிமை ஆணையத்தின் முக்கியமான சில பொறுப்புகள் தான் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. ஆணையத்தின் பொறுப்புகளை செயல்படுத்துவது தொடர்பான செய்தித்தாள் செய்திகளைச் சேகரிக்கவும்.
- சேகரித்த செய்திகளைச் சேர்த்து ஒரு டிஜிட்டல் ஆல்பம் தயார் செய்யவும்.

### மாநில மனித உரிமை ஆணையம்

தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு நிகராக மாநிலங்களிலும் மனித உரிமை ஆணையங்கள் நடைமுறையில் உள்ளன. 1998 டிசம்பர் மாதம் 11–ஆம் தேதி கேரள மாநில மனித உரிமை ஆணையம் நடைமுறைக்கு வந்தது. தலைவர் (Chair person) உட்பட 3 உறுப்பினர்கள் ஆணையத்தில் உள்ளனர். ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியோ / உயர்நீதி மன்ற நீதிபதியோ மனித உரிமை ஆணையத்தின் தலைவராக இருப்பார். மாநில ஆளுநர் ஆணையத்தின் உறுப்பினர்களை நியமிக்கின்றார்.

- தேசிய மனித உரிமை ஆணையம் அண்மைக்காலத்தில் கையாண்ட பிரச்சினைகளைக் கண்டுபிடிக்கவும்.
- உலகளாவிய நிலையில் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக செயல்பட்டு வரும் பொது நலச் சேவை மையமே ஆம் நெஸ்ட்டி இன்டர்நேஷனல் . நமது நாட்டில் இதைப் போன்ற பொதுநலச் சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றதா? கண்டுபிடிக்கவும்?

மக்களாட்சி முறையில் மனித உரிமைகளுக்கு முக்கியமான இடம் உள்ளது. மனிதர்கள் என்ற நிலையில் மதிப்புடனும் மரியாதையுடனும் சொந்த உரிமைகளைச் செயல்படுத்தும் போதுதான் மக்களாட்சிமுறை பொருள் நிறைந்ததும் முழுமையடைவும் செய்கிறது. குடிமக்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்து அதன் மூலம் மக்களாட்சியின் பரவுதலை உறுதிசெய்வதில் தேசிய மனித உரிமை ஆணையம் முக்கிய பங்குவகிக்கிறது.

## தேசிய மகளிர் ஆணையம்



மேலே கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் கவனித்தீர்களல்லவா? என்னென்ன பிரச்சனைகளைப் பெண் போராட்டக்காரர்கள் முன்வைக்கின்றனர்?பெண்கள் அனுபவித்து வரும் வேறு ஏதாவது பிரச்சனைகள் உங்களது கவனத்தில் பட்டதுண்டா?அவை எவையெல்லாம்? விவாதிக்கவும்.

- வேலை செய்யும் இடங்களில் பாகுபாடு.
- 
- 
- 
- 

சமூகத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளில் தலையிட்டுச் சட்டரீதியான தீர்வுகளை முன்வைப்பதும் நடவடிக்கைகளுக்குப் பரிந்துரைகள் செய்வதுமே தேசிய மகளிர் ஆணையத்தின் முக்கியமான பொறுப்பாகும். 1992 ஜனவரி மாதம் 31–ஆம் தேதி தேசிய மகளிர் ஆணையம் உருவாக்கப்பட்டது. தலைவரும் (Chairperson) ஐந்து உறுப்பினர்களும் ஓர் உறுப்பினர் செயலாளரும் அடங்கியதாகும் தேசிய மகளிர் ஆணையம். இந்த உறுப்பினர்களை நியமனம் செய்வது மத்திய அரசாங்கமாகும். உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று வருடங்களாகும். பெண்களின் பாதுகாப்பிற்கும் சமத்துவத்திற்கும் உரிமைப் பாதுகாப்பிற்குமான கூடுதலான அதிகாரங்களும் பொறுப்புகளும் தேசிய மகளிர் ஆணையத்திற்கு உள்ளது.



தேசிய மகளிர் ஆணையத்தின் தலைமையிடம் புதுடெல்லி

### உலக மகளிர் தினம் (International Women's Day)

பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் பாகுபாடுகளையும் தடை செய்தல், சமூக முன்னேற்றத்தில் பெண்களின் பங்களிப்பை உறுதி செய்தல் போன்ற குறிக்கோள்களுடன் உலக மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. மார்ச் 8–ஆம் தேதி உலக மகளிர் தினமாகும். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடை செய்தல், அரசியல் – சமூக – பொருளாதாரத் துறைகளில் எவ்வித பாகுபாடுகளுமின்றி பெண்களின் வலிமையை உறுதி செய்தல் போன்றவற்றை இம்மகளிர் தின கொண்டாட்டத்தின் வாயிலாக ஐக்கிய நாட்டு சபை குறிக்கோள்களாக முன்வைக்கிறது.

## பொறுப்புகள்




- தேசிய மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகளுடன் தொடர்புடைய செய்திகளையும் படங்களையும் சேகரிக்கவும்.
- சேகரித்த விவரங்களைச் சமூக அறிவியல் ஆல்பத்தில் உட்படுத்தவும்.
- பெண்களின் உரிமை பாதுகாப்புத் தொடர்பாகத் தேசிய மகளிர் ஆணையம் கையாண்ட வழக்குகள் நிகழ்வுகளை ஆசிரியர் உதவியுடன் கண்டுபிடிக்கவும்

பெண்களின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான சட்டங்கள் நமது நாட்டில் நடைமுறையில் உள்ளன. அவற்றில் சிலவற்றை நாம் பார்ப்போம்.

### வரதட்சணை தடுப்புச் சட்டம் – 1961

வரதட்சணை என்ற தீய பழக்கத்தைச் சமூகத்தில் இருந்து ஒழிக்கவும் வரதட்சணையின் பெயரால் நடக்கும் கொடுமைகளைத் தடை செய்யவும் வேண்டி 1961–ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமே வரதட்சணை தடுப்புச் சட்டம். திருமணத்திற்காகக் கட்டாயமாகவோ முன் ஒப்பந்தங்கள் மூலமாகவோ கொடுக்கப்படும் செல்வமே வரதட்சணை. ஒரு குறிப்பிட்ட தொகையையோ நகையையோ சொத்துக்களையோ கொடுக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தில் ஒருவரைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தால் அதுவும் வரதட்சணையாகக் கருதப்படும். இச்சட்டப்படி வரதட்சணை பெறுவதும் கொடுப்பதும் குற்றமாகும்.

### குடும்ப வன்முறை தடைச்சட்டம் – 2005

நமது நாட்டில் 2005 அக்டோபர் மாதம் 26–ஆம் தேதி குடும்ப வன்முறை தடைச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. வாழ்க்கை துணையிடமிருந்தோ உறவினர்களிடமிருந்தோ பெண்கள் எதிர் கொள்ளும் வன்கொடுமைகளிலிருந்து பாதுகாப்புக் கொடுப்பதே இச்சட்டம். பெண்மையை அவமதிப்பதும்

கொடுமைப்படுத்துவதுமான எல்லா வன்முறைகளும் குடும்ப வன்முறையில் அடங்கியுள்ளது. குடும்ப வன்முறைக்கு இரையாகும் பெண்களுக்குப் பாதுகாப்பையும் தங்குமிடத்தையும் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளையும் இச்சட்டம் உறுதி செய்கிறது.

- பள்ளியில் தேசிய மகளிர் தினம் கொண்டாடப்படுவதற்கான முன்னேற்பாடுகளை நடத்தவும்.
- இதைத் தொடர்புபடுத்தி ஓர் அழைப்பிதழ் தயார் செய்க.
- பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் மகளிர் ஆணையத்தின் நடவடிக்கைகளையும் குறித்துள்ள பத்திரிகை செய்திகளைச் சேகரித்துச் செய்தித்தொகுப்பு தயார் செய்யவும்.

### மாநில மகளிர் ஆணையம்



1996 மார்ச் மாதம் 14–ஆம் தேதி கேரள மாநில மகளிர் ஆணையம் நடைமுறைக்கு வந்தது.இதன் தலைமையிடம் திருவனந்தபுரம் ஆகும்.மகளிர் ஆணையத்தின் முதல் தலைவர் பெண் கவிஞரான சுகதகுமாரி ஆவர். தலைவர் (Chairperson) தவிர நான்கு உறுப்பினர்களைக் கொண்டதாகும் மாநில மகளிர் ஆணையம். உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்து வருடங்கள் ஆகும்.பெண்கள் எதிர்கொள்ளும் நீதி மறுப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் தலையிட்டு உரிய முடிவுகளைப் பரிந்துரைத்தல், அது தொடர்பான நடவடிக்கைமுறைகளைக் குறித்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தல் போன்றவை ஆணையத்தின் கடமையாகும்.

மக்களாட்சி முறையில் எல்லா குடிமக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். பாலின நீதி அதில் முக்கியமானதாகும். பெண்களின் உரிமைகளும் மதிப்பும் பாதுகாக்கப்படுவதினால் மட்டுமே அது முழுமை பெறும்.சமூகத்தில் காணப்படுகின்ற பெண்களுக்கு எதிரான செயல்களைச் சட்டப்படி எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகளை அந்தந்த கால கட்டங்களில் மகளிர் ஆணையம் செய்து வந்துள்ளது.

பாலின சமத்துவத்தை உறுதி செய்கின்ற இத்தகைய தலையீடுகள் மூலம் பெண்களுக்குச் சமஉரிமையையும் வாய்ப்பையும் உறுதி செய்து மக்களாட்சியை வலுப்படுத்துவதில் மகளிர் ஆணையம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

## தேசிய சிறுபான்மையினர் ஆணையம்






மேலே கொடுக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி செய்திகளைக் கவனிக்கவும். சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்துச் சிறுபான்மை அமைப்புகள் முன்வைத்த கோரிக்கைகள் செய்தியில் இடம்பெற்றுள்ளன. என்னென்ன பிரச்சனைகள் இங்கே முன்வைக்கப்பட்டன?

- பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலை
-
-
-
-
-

நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் தேவைகளைப் பாதுகாத்து அவர்களின் நலனுக்கான சட்டங்களைத் திறம்பட செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யவதற்காக நிறுவப்பட்ட அமைப்பே தேசிய சிறுபான்மையினர் ஆணையம். மதம் – மொழி – கலாச்சார சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் நலனை உறுதி செய்வதே ஆணையத்தின் முக்கிய பணியாகும். 1993 மே 17–ஆம் தேதி தேசிய சிறுபான்மையினர் ஆணையம் நடைமுறைக்கு வந்தது. தலைவரும் (Chairperson) துணைத்தலைவரும் (Vice Chairperson) ஐந்து உறுப்பினர்களும் அடங்கியதே ஆணையம். இவர்களை மத்திய அரசாங்கம் பரிந்துரை செய்யும். ஆணையத்தின் உறுப்பினர்களைக் குடியரசுத் தலைவர் நியமிப்பார். உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். தேசிய சிறுபான்மையினர் ஆணையம் பல்வேறு அதிகாரங்களையும் பொறுப்புகளையும் கொண்டுள்ளது.

**பொறுப்புகள்**

- சிறுபான்மையினர்களுடைய சமூக வளர்ச்சியின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல்.
- சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அரசியல் அமைப்பு நிலைகளையும் சட்டங்களின் செயல்பாடுகளையும் மதிப்பீடு செய்தல்.
- சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் நெருக்கடிகளையும் குறித்து அவ்வப்போது அறிக்கைகள் சமர்ப்பித்தல்.
- சிறுபான்மையினரின் உரிமை மீறல்கள் தொடர்பான புகார்களை விசாரித்து மேல் நடவடிக்கைக்காக பரிந்துரைகள் செய்தல்.
- சிறுபான்மையினருக்கான பாதுகாப்புகளை முறையாகப் பராமரிப்பதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

## மாநில சிறுபான்மையினர் ஆணையம்

2013 –ஆம் ஆண்டு மாநில சிறுபான்மையினர் ஆணையம் நடைமுறைக்கு வந்தது. தலைவர் (Chairperson) துணைத் தலைவர் (Vice Chairperson) அடங்கிய நான்கு உறுப்பினர்கள் ஆணையத்தில் இடம் பெறுவர். இவர்களைப் பரிந்துரை செய்வது மாநில அரசாங்கமாகும். உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று வருடங்களாகும். அரசியலமைப்பில் குறிப்பிட்ட மதம் – மொழி சிறுபான்மையினருக்கு ஒதுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கின்றன என்பதை உறுதி செய்வது சிறுபான்மையினர் ஆணையத்தின் கடமையாகும். இப்பிரிவினர்களுக்குக் கல்வி நிறுவனங்கள் தொடங்குவதற்கும் நடத்துவதற்குமான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்வது ஆணையமாகும்.

- தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தின் தலையீடு தொடர்பான பத்திரிகை செய்திகளைச் சேகரிக்கவும்.
- உங்களது பகுதியில் மொழிச் சிறுபான்மையினர் இருக்கின்றார்களா?கண்டுபிடிக்கவும்?
- மொழிச் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் தீர்வுகளையும் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்பு தயாரிக்கவும்.

அனைத்துப் பிரிவு மக்களின் பங்கேற்பு மற்றும் ஒருங்கிணைப்பு என்பது மக்களாட்சி முறையில் முக்கியமானதாகும். இது சிறுபான்மை மொழியினர், மதப்பிரிவினர், கலாச்சார பிரிவினர் போன்றோர்களின் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது ஆகும். இதனுடன் சிறுபான்மையினரின் நலன் என்பது பெரும்பான்மையினரின் கடமையாகும் என்ற விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். இந்த இலக்குகளை அடைய சிறுபான்மையினர் ஆணையம் எடுக்கும் முயற்சிகள் மக்களாட்சியைப் பரப்புவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

## தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆணையம்

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மிகவும் முன்னுரிமை வழங்க வேண்டியது சாலைகளுக்கும் தகவல் தொடர்புகளுக்கும் ஆகும். இவை இல்லையென்றால் நாம் செய்யும் வேறு எதுவும் பலனளிக்காது. பள்ளிக்கூடங்கள், ஆரோக்கிய பாதுகாப்பு சேவைகள், குடிசைத் தொழில்கள் என இன்னும் பல தேவைகள் இருப்பது தெளிவாகிறது. ஆனால் நாம் அவர்களின் வாழ்க்கை முறையில் தலையிடுவதில்லை என்றும் அவர்களுடைய சொந்த முறைப்படி வாழ்வதற்கு மட்டுமே உதவி செய்ய வேண்டும் என்பதை எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஜவஹர்லால் நேரு (ஜூன் 7, 1952)

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் வார்த்தைகள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட (பட்டிக ஜாதி) பழங்குடியினர் (பட்டிக வர்க்கம்) பிரிவிலுள்ள மக்களுக்காக என்னென்ன வளர்ச்சிப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று நேரு நினைக்கிறார்? விவாதிக்கவும்.

- சாலைகள், தொலைத்தொடர்பு வசதிகள்
-
-

பாகுபாடுகளிலிருந்தும் சுரண்டல்களிலிருந்தும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களைப் பாதுகாப்பதோடு அவர்களைச் சமூகத்தில் உன்னத நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட நிறுவனமே தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் ஆணையங்கள் ஆகும். இதனுடன் அவர்களின் கலாச்சார பன்முகத் தன்மையையும் பண்புகளையும் பாதுகாக்க வேண்டியதும் முக்கியமானதாகும்.இவ்விரண்டு ஆணையங்களும் 2004–இல் நடைமுறைக்கு வந்தன.ஆணையத்தில் ஒரு தலைவரும் (Chairperson) ஒரு துணைத் தலைவரும் (Vice Chairperson) மற்றும் மூன்று உறுப்பினர்களும் இடம்பெறுவர்.குடியரசுத் தலைவர் ஆணையத்தின் உறுப்பினர்களை நியமிக்கிறார். உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.




தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்தின் தலைமையிடம் – புதுடெல்லி

### தாழ்த்தப்பட்டோர் – பழங்குடியினர் (அத்துமீறல்களைத் தடுத்தல்) சட்டம் – 1989

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடைபெறும் அத்துமீறல்களைத் தடுத்தல், இத்தகைய குற்றச்செயல்களைக் கையாள்வதற்கான சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுதல், இவர்களின் நலத்தினும் மறுவாழ்வுக்குமான நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற குறிக்கோள்களுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டமே தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (அத்துமீறல்களைத் தடுத்தல்) சட்டம். 1989–இல் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.இந்தச் சட்டம் பழங்குடி இனத்தவர்களுக்கு

எதிராக நடக்கும் அத்துமீறல்களும் சட்ட மீறல்களும் எவையென்பதையும் குற்றவாளிகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனைகள் எவையெல்லாம் என்றும் இவர்களின் மறுவாழ்வு எப்படி இருக்க வேண்டுமென்றும் குறிப்பிடுகின்றன.

**தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் ஆணையத்தின் பொறுப்புகள்**

- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினப் பிரிவினருக்கு எதிராக நடைபெறும் அத்துமீறல்கள் தொடர்பான புகார்களை விசாரித்தல்.
- தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினரின் நலன், பாதுகாப்பு, முன்னேற்றம் போன்றவற்றை நோக்கமாகக் கொண்ட செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- தாழ்த்தப்பட்டோர்– பழங்குடியினப் பிரிவினர் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்வு காண்பதற்குத் தேவையான பரிந்துரைகளை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தல்.
- தாழ்த்தப்பட்டோர்– பழங்குடியினரின் நலனுக்கான அரசியலமைப்பு முறைகளும் சட்டங்களும் திறம்பட நடைமுறைப்படுத்தப் படுகின்றன என்பதை மதிப்பீடு செய்தல்.

வரலாற்றில் சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட பிரிவினருடைய தீவிர பங்களிப்பை உறுதி செய்வதன் மூலம் மட்டுமே மக்களாட்சி முழுமை பெறுகிறது.அவர்களின் தனித்துவமான பாரம்பரிய அறிவுகளும் கலாச்சாரங்களும், இழந்து போகாமல் பாதுகாக்கப்படுவது மட்டுமின்றி நவீன சமூகத்தில் இம்மக்களின் ஒருங்கிணைப்பையும் உறுதி செய்யப்பட வேண்டும். தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம், பழங்குடியினர் ஆணையம் போன்றவற்றின் செயல்பாடுகள் இந்தச் செயல்முறைக்கு ஊக்கமளிப்பதுடன் மக்களாட்சியை மேலும் வலிமைப்படுத்துவதாகவும் அமைகின்றன.

- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்காக அரசாங்கம் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற பல்வேறு நலத்திட்டங்கள் எவையெல்லாம் என்று கண்டுபிடித்துப் பட்டியலிடவும்.
- தேசிய தாழ்த்தப்பட்டோர் – பழங்குடியினர் ஆணையங்களின் தலையீடுகளைக் குறிப்பிடுகின்ற செய்தித்தாள் செய்திகளைச் சேகரிக்கவும்.

**மாநில தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி மலைவாழ் மக்கள் பிரிவு ஆணையம்**

இது கேரளத்திலுள்ள தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி மலைவாழ் மக்கள் பிரிவினர்களின் நலனையும் பாதுகாப்பையும் உறுதி செய்வது என்ற குறிக்கோளுடன் உருவாக்கப்பட்ட அமைப்பே கேரள தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி மலைவாழ் மக்கள் பிரிவு ஆணையம். தலைவரும் மற்றும் இரண்டு உறுப்பினர்களும் அடங்கியதே ஆணயம். ஆளுநர் இவர்களை நியமனம் செய்கிறார். உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடி மலைவாழ் மக்களின் உரிமைகளை மறுத்தல் தொடர்பான புகார்களை விசாரணை செய்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வது இதன் முக்கிய கடமையாகும். மேலும் மேற்குறிப்பிட்ட பிரிவினர்களின் சமூக – பொருளாதார நிலைகளை மதிப்பீடு செய்வதும் அவர்களின் வளர்ச்சியை உறுதி செய்வது தொடர்பான பரிந்துரைகளைச் செய்வதும் ஆணையத்தின் முக்கிய பொறுப்புகளாகும்.

## தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

கல்வி அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உயர்கல்வியைக் குறைந்த செலவில் வழங்க வேண்டும் என்பதே கல்வித் துறையின் கொள்கையாகும். இந்தச் சமூகங்கள் அனைத்தும் சம நிலைக்கு உயர்த்தப்பட வேண்டுமானால் தாழ்த்தப்பட்ட பிரிவினர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்துவதே ஒரே வழி.

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்
1927 பிப்ரவரி 24 (Legislative council)
சட்டமன்றத்தில் ஆற்றிய பட்ஜெட் உரை

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் உரையைக் கவனிக்கவும். என்னென்ன செயல்பாடுகளைப் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் உயர்விற்காக அம்பேத்கர் பரிந்துரைக்கிறார்?

- உயர்கல்விக்கான செலவைக் குறைக்கவும்
-
-
-

நாட்டில் சமூக நிலையிலும் பொருளாதார நிலையிலும் பின்தங்கி நிற்கும் பிரிவினரின் உயர்வைக் குறிக்கோளாகக் கொண்டு பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான தேசிய ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது.சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின்தங்கி நிற்கும் பிரிவினரின் பின்தங்கிய நிலையைச் சரி செய்வதற்கான தீர்வுகளைச் சமர்ப்பிப்பதும் ஆணையத்தின் கடமைகளில் உட்பட்டதாகும்.1993–இல் தான் ஆணையம் நடைமுறையில் வந்தது. தலைவரும் துணைத் தலைவரும் மூன்று உறுப்பினர்களும் அடங்கியதே ஆணையம். குடியரசுத் தலைவரே ஆணையத்தின் உறுப்பினர்களை நியமிக்கின்றார். உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று வருடங்களாகும். 2018–இல் ஆணையத்திற்கு அரசியலமைப்பு அங்கீகாரம் கிடைத்தது.

## தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பொறுப்புகள்

- பிற்படுத்தப்பட்டவருக்கான அரசியலமைப்பு விதிகள் மற்றும் சட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்படுகிறது என்பதை உறுதி செய்தல்.
- பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் நலனுக்காக உள்ள பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.
- பிற்படுத்தப்பட்ட பிரிவினர் எதிர்கொள்ளும் கொடுமைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் நீதியை உறுதி செய்வதற்குமாகப் பரிந்துரை செய்வது.
- பின்தங்கிய நிலை தொடர்பான தேவைகளை ஆராய்ந்து தேவையான அறிவுரைகளை அரசுக்கு சமர்ப்பித்தல்.

### கேரள மாநில பிற்படுத்தப்பட்ட பிரிவினர் ஆணையம்

கேரள மாநில பிற்படுத்தப்பட்ட பிரிவினர் ஆணையம் 1993–இல் நடைமுறைக்கு வந்தது. இவ்வாணையத்தின் பதவிக்காலம் மூன்று வருடங்களாகும். பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் சமூக– பொருளாதார நிலைகளைக் கருத்தில் கொண்டு இப்பிரிவினரை இட ஒதுக்கீட்டுப் பட்டியலில் உட்படுத்தி சலுகைகள் வழங்குவதற்கு தேவையான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பது ஆணையத்தின் பொறுப்பாகும்.



தேசிய பிற்படுத்தப்பட்ட பிரிவு ஆணையத்தின் தலைமையிடம் புதுடெல்லி

- தேசிய பிற்படுத்தப்பட்ட ஆணையம் மற்றும் மாநில பிற்படுத்தப்பட்ட பிரிவினர் ஆணையம் இவற்றின் தற்போதைய தலைவர்களைக் கண்டுபிடிக்கவும்.
- தேசிய பிற்படுத்தப்பட்ட பிரிவு ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்துக் குறிப்பு தயாரிக்கவும்.

## மக்களாட்சிப் பரவல்: நிறுவனங்களின் பங்கு

பரந்த நிலப்பரப்பும் அதிக மக்கள் தொகையும் பல்வேறு கலாச்சார பன்முகத் தன்மையுமுள்ள நமது நாட்டில் பல்வேறு மக்கள் பிரிவினரின் சமூக, பொருளாதாரப் பின்தங்கிய நிலைக்குத் தீர்வு காண்பது இன்றியமையாததாகும்.அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள சம வாய்ப்பு, சமூக நீதி மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் மட்டுமே இந்த பின்தங்கிய நிலைக்குத் தீர்வு காண முடியும்.சமூக– பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினரையும் சமூகத்தின் உன்னத நிலையில் உயர்த்தினால் மட்டுமே மக்களாட்சி முழுமையடையும்.

### மத்திய பொதுத் தேர்வாணையம் (UPSC)

இந்திய அரசு பணியிடங்களை நிரப்புவதற்காக நிறுவப்பட்ட ஒரு அரசியலமைப்பு நிறுவனமே மத்திய பொதுத் தேர்வாணையம். (UPSC – Union Public Service Commission) இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 320 –இன் படி ஆணையம் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. தலைவர் உட்பட 10 உறுப்பினர்கள் ஆணையத்தில் உள்ளனர். இவர்களைக் குடியரசு தலைவர் நியமனம் செய்வார். ஆறு வருடங்களோ 65 வயதோ உறுப்பினர்களின் பதவிக் காலமாகும். மத்திய ஆட்சி பணிக்கும் (Central Civil Service) அனைத்து இந்திய பணிகளுக்கும் (All India Service) அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பது மத்திய பொதுத் தேர்வாணையமாகும். மத்திய அரசுப் பணிகளுக்கு நேர்முகம் மூலமாகவும் எழுத்து தேர்வுகள் மூலமாகவும் தேர்ந்தெடுப்பதே மத்திய பொதுத் தேர்வாணையத்தின் முக்கிய பொறுப்பாகும். மாநிலங்களில் அரசுப் பணிக்காகத் தேர்வு செய்வது அந்தந்த மாநிலங்களிலுள்ள பொதுத் தேர்வாணையம் (பப்ளிக் சர்வீஸ் கமிஷன்– PSC) ஆகும். கேரளத்தில் கேரள பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (KPSC) மாநில அரசாங்க பணிகளைத் தேர்வு செய்கிறது.

ஜனநாயக ஆட்சி முறையில் வெற்றியும் தோல்வியும் மக்கள் பங்கேற்பைப் பொறுத்து அமையும். பல்வேறு மக்கள் பிரிவினரின் பங்களிப்பை அரசியல் செயல்பாட்டில் உறுதிப்படுத்துவதில் மேலே குறிப்பிட்டுள்ள அரசு சார் – அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு முக்கிய பங்கு உள்ளது.எடுத்துக்காட்டாக இந்திய தேர்தல் ஆணையம் குடிமக்களின் அரசியல் உரிமைகளைச் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் பயன்படுத்துவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதன் மூலம் அரசியல் மக்களாட்சியின் அடித்தளத்தை விரிவு படுத்துகிறது. 1951 – 52 முதலே தேர்தல், மக்களாட்சியை வலுப்படுத்துவதற்கும் சுதந்திரமானதும் நீதிபூர்வமானதுமான தேர்தலை உறுதி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் எடுத்துள்ளது. தொகுதிகளைத் தீர்மானித்தல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமையை நடைமுறைப்படுத்துதல், அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தல், தேர்தல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல், தேர்தல் எழுத்தறிவு நிறைவேற்றப்படல் போன்ற ஆணையம் செயல்படுத்தி வரும் செயல்கள் இந்திய ஜனநாயகத்தை வலுப்படுத்துகிறது.

வரலாற்று ரீதியான காரணங்களால் ஒடுக்கப்பட்ட பல்வேறு பிரிவினரை ஜனநாயக செயல்பாட்டின் மூலம் ஒருங்கிணைத்து சமூகத்தின் உயர்ந்த நிலைக்கு உயர்த்திக் கொண்டு வருவதில் தேசிய மனித உரிமை ஆணையம், தேசிய மகளிர் ஆணையம், தேசிய சிறுபான்மையினர் நல ஆணையம், தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் போன்ற அமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தேர்தல் ஜனநாயகத்திற்கு அப்பாற்பட்டு ஒடுக்கப்பட்ட பிரிவினரின் துயரங்களை முக்கியமாக தீர்வு காண வேண்டி உள்ளன. இந்த செயல்பாடுகளைத்தான் மேற்குறிப்பிட்ட ஆணையங்கள் நிறைவேற்றி வருகின்றன. சமூகத்தில் பின்தங்கிய நிலை தொடர்பான பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சிப்பதுடன் தனிநபர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதற்கு இந்த ஆணையங்கள் முயற்சி செய்கின்றன.

குடியுரிமையைப் பாதுகாப்பதுடன் மனிதரில் உள்ளார்ந்த கண்ணியத்திலிருந்து உருப்பெற்றுவந்த உரிமைகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டியது மக்களாட்சிப் பரவலில் தவிர்க்க இயலாததாகும்

இது போன்ற உரிமைகளை உறுதிப்படுத்தி மக்களாட்சியின் செயல்பாட்டை நிலை நாட்டுவதில் மனித உரிமை ஆணையம் பாரபட்ச மற்ற பங்கு வகிக்கின்றது. பெண்களின் சமூக ரீதியான முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுப்பதற்கும் அவர்களின் மதிப்பை உயர்த்துவதற்கும் உதவும் முறையிலான நடவடிக்கைகளைச் செய்வதன் மூலம் மகளிர் ஆணையம் மக்களாட்சியைக் கூடுதல் பொருளுடையதாக்குகிறது.

சிறுபான்மையினரின் பாதுகாப்பையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்த வேண்டியது மக்களாட்சி அரசின் பொறுப்பாகும். சிறுபான்மையினருக்கு எதிரான அத்துமீறல்களைத் தடுப்பதன் மூலமும் சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதி செய்வதன் மூலமும் சிறுபான்மையினர் ஆணையம் மக்களாட்சியை வலுப்படுத்துகிறது.

### தேசிய குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையம்

குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட ஆணையமாகும். தேசிய குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது. 2007 மார்ச் மாதம் ஐந்தாம் தேதி ஆணையம் நிலவில் வந்தது –ஒரு தலைவரும் ஆறுஉறுப்பினர்களும் ஆணையத்தில் உள்ளனர்.குழந்தைகளின் கல்வி, சுகாதாரம், பராமரித்தல், குழந்தைகளின் நலன், நீதி, ஆகியவை ஆணையத்தின் குறிக்கோள்களாகும். கேரளத்தில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க கேரள மாநில குழந்தை ஆணையம் செயல்பட்டு வருகின்றது.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் எதிர்கொள்ளும் பல்வேறு சமூகப் பொருளாதார பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதிலும் அவர்களைச் சமூகத்தில் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் மிகப்பெரிய பொறுப்புகளை நிறைவேற்றுகின்றது. பிற பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் சமூகப் பொருளாதார கல்வி சார்ந்த பின்னடைவுகளுக்குத் தீர்வு கண்டு அவர்களையும் சமூகத்தில் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரும் மக்களாட்சி செயல்பாடுகளை தான் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் செய்து வருகிறது.

இவ்வாறு ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரை ஒருங்கிணைத்துக் கொண்டு அரசியல் உரிமைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் இந்திய மக்களாட்சியைச் சமூகப் பொருளாதார நிலைகளுக்கு விரிவடையச் செய்கின்றன.

மக்களாட்சியின் பரவலில் நிறுவனங்களின் பங்கு என்ற தலைப்பில் வகுப்பில் ஒரு குழு விவாதம் நடத்தவும்.

## தொடர் செயல்பாடுகள்

1. உலக மகளிர் தினம் தொடர்பாக "மகளிர் பாதுகாப்பு "என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடத்தவும்.

2. நமது பள்ளியில் நடத்தப்படும் பள்ளி பாராளுமன்ற தேர்தல் செயல்பாடுகளைக் கவனித்து இருப்பீர்களல்லவா?தேர்தல் ஆணையத்தின் பணிகளை மதிப்பீடு செய்து வகுப்பில் ஒரு மாதிரி தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யலாமா?அதற்கு என்னென்ன முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும்?

- 
- 
- 

3. மனித உரிமை மீறல்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் அதற்குத் தீர்வு காண்பதற்கும் பரிந்துரைகள் செய்வதற்குமான விளம்பரப் பலகைகளையும் படங்களையும் சேகரித்து ஒரு பொருட்காட்சி நடத்தவும்.

4. சமூகத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பான ஒரு நாடகம் தயார் செய்து வகுப்பில் நடித்துக் காட்டவும்.

5. அட்டவணையை நிரப்புக

மக்களாட்சியை நிலைநிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பல்வேறு ஆணையங்களின் பெயர்களையும் உருவான வருடத்தையும் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் நிரப்புக.

| | ஆணையத்தின் பெயர் | உருவான வருடம் |
|---|---|---|
| 1 | தேர்தல் ஆணையம் | 1950 |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |

# 8 பாலினப் பாகுபாடற்ற சமூகத்தை நோக்கி

**பாலின நிலையும் பாலின வேறுபாடும் மாறுபட்ட கருத்துக்களாகும். பாலின நிலையைத் தேர்வு செய்யும் உரிமை தனிநபரில் அடங்கியுள்ளது.**

**மாண்புமிகு கேரள உயர்நீதிமன்றம்**

மாண்புமிகு கேரள உயர்நீதிமன்றம் உற்று நோக்கியதன் அடிப்படையில் 2023 ஆகஸ்ட் 8–ஆம் தேதி வெளியிட்ட ஒரு செய்தியாகும் இது.

இந்தச் செய்தியில் இருந்து உங்களுடைய கவனத்தை ஈர்த்தவை என்னென்ன?

- 
- 

இந்தச் செய்தியில் இடம்பெற்றுள்ள பாலின நிலை (gender), பாலியல் (sex) என்ற வார்த்தைகளை இதற்கு முன் கேட்டிருக்கிறீர்களா?எந்தெந்த அதிகாரப்பூர்வமான ஆவணங்களில் இவை குறிப்பிடப்பட்டுள்ளன?

கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலைப் பூர்த்திச் செய்யவும்

- ஆதார் அடையாள அட்டை
- பள்ளி சேர்க்கை ஆவணங்கள்
- பிறப்புச் சான்றிதழ்
- குடும்ப அட்டை (ரேஷன் கார்டு)
-
-

பல்வேறு அடையாள ஆவணங்களில் பாலின நிலை, பாலினம் என்ற சொற்களைத் திரும்பத்திரும்பப் பயன்படுத்தி இருப்பதைப் பார்க்க முடியும். ஆனால் வேறு சில அடையாள ஆவணங்களிலும் விண்ணப்ப படிவங்களிலும் இதற்குப் பதிலாக ஆண்/பெண் /மூன்றாம் பாலினத்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாலினமும் பாலின நிலையும் (sex and gender)

பாடத்தின் முதல் பகுதியில் கொடுத்திருக்கும் செய்தியில் மாண்புமிகு கேரள உயர்நீதிமன்றம் பாலினமும் பாலின நிலையும் வெவ்வேறான கருத்துக்களாகும் என்று குறிப்பிட்டுள்ளது.

ஆண் என்றும் பெண் என்றும் வேறுபடுத்தும் உயிரியல் முறையிலான சிறப்புகளைக் குறிப்பிடுவது தான் பாலினம்.குரோமோசோம்கள், உடலமைப்பு, ஹார்மோன்கள், இனப்பெருக்க அமைப்பு மற்றும் உடல் காரணிகள் என்பவற்றில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசங்களைத் தான் பாலினம் என்ற சொல் குறிப்பிடுகிறது.

பாலின நிலை என்பது குறிப்பிட்ட சில சமூகச் சூழல்களில் ஆண், பெண் போன்ற பிரிவுகளுடன் தொடர்புடைய சமூக,கலாச்சார, உளவியல் சிறப்புகளைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக சில சமூகங்களில் இளஞ்சிவப்பு பெண்களுக்கான நிறம் என்றும் நீல நிறம் ஆண்களுக்கான நிறம் என்றும் கருதப்படுகின்றன. இதற்கு எந்த ஒரு உயிரியல் காரணமும் இல்லை.இது நீண்டகால சமூக மரபுகளுடன் நிலை கொள்கிறது.இதுபோன்ற வேறு சூழல்களை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?

பாலின நிலை உயிரியல் அடிப்படையிலோ நிலையானதன்மையோ உடையது அல்ல. சமூக தலையீட்டின் மூலம் பெறப்படுவதும் வலுப்படுத்தப்படுவதுமாகும். அதாவது பாலின நிலை என்பது ஒரு சமூக கட்டமைப்பாகும். பாலின நிலை என்பது பாலின பாகுபாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு கருத்தாகும். ஒவ்வொரு சமூகமும் ஆண், பெண் என்னும் பாலின நிலைகளுடன் தொடர்புடைய சில எதிர்பார்ப்புகளையும் நடத்தை விதிகளையும் உருவாக்கியுள்ளது. எடுத்துக்காட்டாக ஆண் குழந்தைகளுக்கு விளையாட்டுத் துப்பாக்கியும் பெண் குழந்தைகளுக்குப் பொம்மைகளும்

தான் பொருத்தமான விளையாட்டுப் பொருட்கள் என்ற பொதுவான எண்ணம் நிலை நிற்பதைக் காணமுடிகிறது. இதுபோல் தனிநபர்கள் சமூகத்தில் இருந்து பாலின நிலையைக் குறித்துள்ள எதிர்பார்ப்புகளையும் நடத்தை விதிகளையும் சமூகமயமாக்கலின் மூலம் பெறுகின்றனர். இவை பல்வேறு கலாச்சாரங்களில் வேறுபட்ட முறையில் காணப்படுகிறது. அவற்றோடு இவைக்கு காலத்திற்கு ஏற்ப மாற்றங்கள் ஏற்படவும் செய்கின்றன.

பாலின வேறுபாட்டின் அடிப்படையில் சமூகம் எதிர்பார்க்கும் பாலின நிலை எல்லா தனிநபர்களுக்கும் கிடைப்பதில்லை. சிலர் பாலினத்திற்குப் பொருந்தாத பாலின நிலையுடைய மனிதர்கள் ஆக இருப்பார்கள். அவ்வகையில் சமூக எதிர்ப்பார்ப்பில் இருந்து வித்தியாசமான பாலின நிலை உள்ளவர்கள் தான் மூன்றாம் பாலினத்தவர் (Transgender) ஆவர்.

**சமூகமயமாக்கல் (Socialisation)**

சமூகமயமாக்கல் என்பது பிறந்ததிலிருந்து வாழ்க்கை முழுவதும் நடைபெறும் ஒரு செயல்முறையாகும். குழந்தைகள் பிறக்கும் போது சமூகம் அல்லது சமூக நடத்தை பற்றிய அறிவு இல்லாமல் இருக்கின்றனர். வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில், சமூகத்தின் ஒரு பகுதியாக மாறுவதற்காக, சமூகத்தின் மதிப்புகள் மற்றும் பழக்கங்களையும் அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். இந்த கற்றல் செயல்முறையே (learning process) சமூகமயமாக்கல் ஆகும்.

**மூன்றாம் பாலினத்தவர் (Transgender)**

மூன்றாம் பாலினத்தவர் என்றால் பிறக்கும் போது அந்த நபருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாலின நிலையுடன் பொருந்தாத நபர் என்பது தான் அதன் பொருள். இதில் திருநம்பியும் (Transman) திருநங்கையும் (Trans woman) உட்படுவர்.

Clause (K) of Section 2, TPPR Act, 2019)

பாலின வேறுபாடு நம்மை உடலமைப்பின் அடிப்படையில் ஆண் அல்லது பெண் என்று வகைப்படுத்துகின்றது. பாலின நிலை நமக்குள் ஆண்மை (Masculinity) அல்லது பெண்மை (Femininity) யை உருவாக்குகிறது. ஆண், பெண் போன்றவர்களிடமிருந்து சமூகம் எதிர்பார்க்கின்ற நடத்தைகளைத் தான் ஆண்மை, பெண்மை என்னும் சொற்கள் சுட்டிக்காட்டுகிறது. ஆண்கள் வலிமையானவர்கள் என்றும் பெண்கள் அன்பின் அடையாளமாக விளங்குகிறார்கள் என்றும் கருதுவதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆண்கள் அழக்கூடாது என்பதும் பெண்கள் கூடுதல் உணர்ச்சிவசப்படுபவர்கள் என்று கூறுவதும் மற்றுமொரு எடுத்துக்காட்டாகும். கூடுதல் எடுத்துக்காட்டுகளைக் கண்டுபிடிக்கவும்.

பாலின வேறுபாடு பிறக்கும் போதே கிடைப்பதனால் அது இயல்பான நிலையாகும். பாலின நிலை என்பது பெறப்பட்ட பதவி ஆகும். அது நாம் வாழ்கின்ற பண்பாட்டில் இருந்து கற்று உருவாக்கப்பட்டதாகும்.

## இயல்பான நிலையும் பெறப்பட்ட நிலையும் (Ascribed Status and Achieved Status)

பிறக்கும் போதே ஒரு நபருக்குக் கிடைக்கும் சமூக நிலைதான் இயல்பான நிலை. ஒரு நபரால் தேர்ந்தெடுக்க முடியாததான வயது, இனம், பாலினம் போன்றவை இயல்பான நிலைக்கு எடுத்துக்காட்டாகும்.

தனிநபர்கள் தங்கள் சொந்த திறமைகள் மூலமும் தேர்வுகள் மூலமும் பெற்றுக்கொள்ளும் சமூக நிலை தான் பெறப்பட்ட நிலை. கல்வித் தகுதி, வருமானம், தொழில்திறமை, நிபுணத்துவம் போன்றவை பெறப்பட்ட நிலைக்கு எடுத்துக்காட்டுகளாகும். இவை படிப்படியாக சமூகத்திலிருந்து கற்றுக் கொள்ளப்பட்டவையாகும். பாலின நிலை சமூக தொடர்புகள் மூலம் கற்று வலுப்பெறுவதால் அது பெறப்பட்ட நிலையாகிறது.

பட்டியலை விரிவாக்குங்கள்

| பாலினம் (Sex) | பாலின நிலை (Gender) |
|---|---|
| • உயிரியல் பண்புகளைக் குறிக்கின்றது | • சமூக, கலாச்சார மற்றும் உளவியல் பண்புகளைக் குறிக்கிறது |
| • | • |
| • | • |

பாலினநிலை, பாலினப்பாகுபாடு இவற்றிற்கிடையேயான வேறுபாட்டை வகுப்பில் விவாதித்துக் குறிப்பு தயார் செய்யவும்.

பாலின நிலை பாலினப் பாகுபாட்டிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை நாம் விவாதித்தோம் அல்லவா? பாலின நிலை பிறப்பு அல்லது உடலால் தீர்மானிக்கப்படுவது அல்ல மாறாக சமூகத் தொடர்புகள் மூலமும் பழக்கவழக்கங்கள் மூலமும் தீர்மானிக்கப்படுகிறது.

சமூக அமைப்புக்குள் ஒரு நபரின் நிலையைத் தான் மதிப்பு என்கிறோம் (status). சமூக அமைப்புக்குள் தனிநபர்கள் எவ்வாறு அங்கீகரிக்கப்படுகிறார்கள் அல்லது தீர்மானிக்கப்படுகிறார்கள் என்பதைக் குறிக்கும் முக்கியமான காரணி தான் மதிப்பு (status). எல்லா சமூகங்களும் தங்கள் உறுப்பினர்களை மதிப்பிற்குத்தக்கவாறு வகைப்படுத்தியுள்ளன. அதன் மூலம் சமூக அடுக்கு உருவாக்கப்படுகிறது. அவ்வாறு தனிநபர்கள் சமூகத்தில் உயர்ந்த மதிப்பும் தாழ்ந்த நிலையும் கொண்ட நபர்களாக உறுதிசெய்யப்படுகிறார்கள்.

## சமூகப் படிநிலை (Social Stratification)

ஒரு சமூகத்தில் உள்ள தனி நபர்களைச் சமத்துவம் இல்லாத முறையில் வெவ்வேறு படிநிலைகளிலோ அடுக்குகளிலோ சமூகமாக நிலைப்படுத்துவது தான் சமூகப் படிநிலை. உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்குச் சமூகத்தில் உயர்ந்த மதிப்பும் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்குத் தாழ்ந்த மதிப்பும் பெறும் வகையில்தான் இது செயல்படுகிறது. அடிமை முறை, ஜாதிமுறை போன்றவை சமூகத்தில் இருந்த சில சமூக படிநிலைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

நமது சமூகத்தில் ஆண் பெண் இருவரின் நிலை சமமாக உள்ளதா? வேறுபாடுகளைக் கவனித்தீர்களா?



### கிளாடியா கோல்டின்

2023–ஆம் ஆண்டு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு பெற்றவர். பணி புரியும் பெண்களைப் பற்றி ஆய்வு செய்தார். தொழிலில் பங்களிப்பு மற்றும் வருமானம் ஆகியவற்றில் உள்ள பாலின வேறுபாடுகளுக்கான (gender difference) காரணங்களைக் குறித்து ஆராய்ச்சி நடத்தினார். பொருளாதாரத்தில் பரிசு பெற்ற மூன்றாவது பெண்மணி கிளாடியா கோல்டின் ஆவார்.

## பாலின நிலையில் பங்கு (Gender Roles)



மூன்று நண்பர்களுக்கிடையேயான உரையாடலை நீங்கள் கவனித்தீர்கள் அல்லவா? இந்த உரையாடலுக்கான உங்கள் பதில் என்ன? சில வேலைகளைக் குறிப்பிட்ட பாலினத்தவர்கள் மட்டுமே செய்ய வேண்டும் என்ற கூற்றை நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? உண்மையாகவே வேலைகளில் இவ்வாறு ஆண் – பெண் வேறுபாடு உள்ளதா?

ஒரு பதவியுடன் தொடர்புபடுத்தி எதிர்பார்க்கப்படும் நடத்தைதான் பங்கு (Role) எனப்படும். ஒரு சமூகத்தில் ஆண்களும் பெண்களும் எவ்வாறு பேச வேண்டும், சிந்திக்க வேண்டும், உடை அணிய வேண்டும், நடந்து கொள்ள வேண்டும், எந்தெந்த பணிகளைச் செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்புகள்தான் பாலின நிலையின் பங்கு (gender role) என்ற சொல் குறிப்பிடுகிறது. ஒரு சமூகம் ஆண்மை மற்றும் பெண்மையுடன் தொடர்புபடுத்தும் குறிப்பிட்ட பண்புகளும் அணுகுமுறைகளும் பிற செயல்களும் தான் பாலின பங்கு என்று கூறப்படுவதன் பொருள். எடுத்துக்காட்டாக ஒரு குடும்பத்தில் வருமானம் ஈட்டுவது ஆண்கள் என்றும் வீட்டு வேலைகளைச் செய்வது பெண்கள் என்று நம்பும் தன்மை சில சமூகங்களில் நிலை நிற்கின்றது. இந்தப் பங்குகள் தனி நபர்களின் தேர்வுகளைக் கட்டுப்படுத்துகின்றன. பாலின பங்குகளின் அடிப்படையில் நம் சமூகத்தில் பல்வேறு பழக்க வழக்கங்கள் உள்ளன.

பாலினத்தின் அடிப்படையில் உங்கள் பள்ளியில் பொறுப்புகளை ஒதுக்குகிறார்களா? உங்கள் பள்ளியில் பின்வரும் பொறுப்புகளைப் பெரும்பாலும் செய்வது யார்?

**சரி பார்ப்புப் பட்டியலைப் பூர்த்தி செய்யவும்**

| பொறுப்புகள் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| • பள்ளிக்கூடுகையில் வழிபாட்டுப் பாடலை பாடுவது யார்? | | |
| • பெஞ்ச், மேசை இவற்றை ஒழுங்குபடுத்துவது | | |
| • வகுப்பறையில் டிஜிட்டல் கருவிகளை ஒழுங்குபடுத்துதல். | | |
| • வகுப்பின் வெளியே உள்ள தேவைகளுக்குச் செல்வது | | |

இன்று பள்ளிகளில் இவ்வாறான செயல்பாடுகளை ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் இணைந்து செய்கின்றனர் என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.



ஆண்களுக்கும் பெண்களுக்கும் பாரம்பரியமாகப் பகிர்ந்து கொடுத்துள்ள அல்லது உறுதிப்படுத்தி தரப்பட்ட வேலைகளையும் பொறுப்புகளையும் ஒன்றாக இணைந்து பகிர்ந்து செய்யும் முறையில் உள்ள சூழல்களை உருவாக்கி வகுப்பில் ஒரு ரோல் பிளே (பங்கு நாடகம்) நடத்தவும்.

## பாலின நிலையும் சமூக நெறிமுறைகளும் (Gender and Social norms)



இந்தியாவில் முன் காலத்தில் நிலவியிருந்த சதி என்ற சமூக மூடப்பழக்கவழக்கத்தை இந்தப் படம் குறிப்பிடுகிறது. கணவன் இறந்தால் மனைவி அவரது ஈமத்தீயில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்ற மூடப்பழக்கம் தான் சதி. இந்தியாவில் நிலவிலிருந்த மற்றொரு சமூக மூடப்பழக்கம் தீண்டாமை ஆகும். தனி நபர்களை வெவ்வேறு ஜாதிகளுக்குள் உட்படுத்தி அதில் தாழ்ந்த ஜாதியாகக் கருதப்படுபவர்கள் உயர்ந்த ஜாதியாகக் கருதப்படுபவர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட இடைவெளியைக் கடைபிடித்து மட்டுமே சமூகத்தில் பழகுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இந்தப் பழக்கத்தைத் தான் தீண்டாமை என்றனர். பழங்காலத்தில் சதியும் தீண்டாமையும் சட்டங்களாகக் கடைபிடிக்கப்பட்டது. ஆனால் பின்னர் அவை சமூக சீர்திருத்தங்களின் வாயிலாக சட்டத்தால் தடை செய்யப்பட்டன.

1987 சதித் தடைச் சட்டத்தின் மூலம் இந்திய பாராளுமன்றம் சதியைத் தடை செய்தது. இந்தச் சட்டம் தன்னார்வமாகவோ கட்டாயமாகவோ சதி செய்வதையும் சதி நடைமுறைக்கு ஆதரவாக அறிக்கைகளை வெளியிடுவதையும் தடை செய்கிறது.

அரசியலமைப்புப் பிரிவு 17–இல் 1955–ஆம் ஆண்டின் குடியுரிமை சட்டத்தின் மூலமாகவும் இந்தியாவில் தீண்டாமை பழக்கம் தடை செய்யப்பட்டது.

எழுதப்படாததும் ஆனால் காலங்காலமாக ஒரு சமூகத்தில் நிலைநிற்பதுமான சில பழக்கவழக்கங்கள் நம்மைச் சுற்றியுள்ளன. இவைதான் சமூக நெறிமுறைகள் (Social Norms). ஒரு குறிப்பிட்ட சமூகக் குழு அல்லது கலாச்சாரத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகக் கருதப்படும் நம்பிக்கைகள், நடத்தைகள் மற்றும் அணுகுமுறைகளின் எழுதப்படாத விதிகள் தான் சமூக நெறிமுறைகள். ஒருவரைப் பார்க்கும் போது வாழ்த்துவதும் நன்றி சொல்வதும் வழக்கங்களாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கைகளைக் கவனியுங்கள்

- குடிநீரை வீணாக்காதீர்கள்.
- ஒரு நபரையும் உடல் ரீதியாகத் துன்புறுத்தாதீர்கள்.
- மூத்த குடிமக்களை மதிக்க வேண்டும்.
- இருசக்கர வாகன ஓட்டிகள் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும்.
- உடல் தனித்தன்மைகளின் அடிப்படையில் ஒருவரையும் தனிமைப்படுத்தக்கூடாது.
- சட்டபூர்வமான தேர்தலுக்கு எந்த ஒரு தனி நபருக்கும் உரிமை உண்டு.
- மூத்த குடிமக்களைப் பாதுகாக்க வேண்டும்.
- வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் குற்றமாகும்.

இந்த அறிக்கைகளைச் சட்டங்கள் என்றும் பழக்கவழக்கங்கள் என்றும் வகைப்படுத்தவும்.

| சட்டங்கள் | பழக்கவழக்கங்கள் |
|---|---|
| • ஒரு நபரையும் உடல் ரீதியாக துன்புறுத்தக் கூடாது. | • மூத்த குடிமக்களை மதிக்க வேண்டும். |
| • | • |
| • | • |
| • | • |
| • | • |

இதுபோன்ற சட்டங்களையும் பழக்கவழக்கங்களையும் கண்டறிந்து அவற்றைப் பட்டியலில் சேர்க்கவும்.

சட்டபூர்வமல்லாத பழக்கவழக்கங்கள் இன்றும் சமூகத்தில் ஏன் நிலை நிற்கின்றன? செயல்பாடு புத்தகத்தில் உங்கள் கருத்துக்களை எழுதவும்.

## பாலின பொதுத்தன்மை (Gender Stereotypes)

கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளைக் கவனியுங்கள்




கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகள் சரி என்று நினைக்கிறீர்களா? இவை பரம்பரையாகச் சமூகம் தவறாகக் கருதிய சில கருத்துக்கள் அல்லவா?

பெண்களுடைய மற்றும் ஆண்களுடைய பண்புகள் என்று சமூகம் தவறாகக் கருதி வைத்திருக்கும் இதுபோன்ற சில கருத்துக்களை அவருடைய அடிப்படை குணங்கள் என்ற முறையில் பொதுவாகப் பலரும் பார்க்கிறார்கள். இவ்வாறு சில உண்மைக்குப் புறம்பான அல்லது ஓரளவு சரியானதுமான சில கருத்துக்களைப் பெண்கள் அல்லது ஆண்களின் பண்புகளாக மிக எளிமையான முறையில் முன் வைப்பதன் மூலம் ஸ்டீரியோடைப் அல்லது பொதுத்தன்மை உருவாக்கப்படுகிறது.

### பொதுத்தன்மை (stereotype)

பொதுவான அடையாளங்களின் அடிப்படையில் சில சிறப்பு குழுக்களையும் மக்களையும் சமூக ரீதியாக வகைப்படுத்தும் முறைதான் பொதுத்தன்மை. ஜாதி, மதம், தொழில், மொழி, பாலின நிலையின் அடிப்படையில் பொதுத்தன்மை உருவாக்கப்படுகிறது.

பாலின ஸ்டீரியோடைப்களின் எடுத்துக்காட்டுகளை உங்களுக்குக் கண்டுபிடிக்க முடியுமா? கீழே சேர்க்கவும்.

- பெண்கள் செவிலியர்களாக இருப்பது நல்லது. ஆண்கள் அதற்குத் தகுந்தவர்கள் அல்ல.
- 
- 

பாலின நிலையின் பங்குகள், பழக்கவழக்கங்கள், ஸ்டீரியோடைப்புகள் ஆகியவை பாலின நிலை வேறுபாடுகளுக்குக் காரணமாகின்றன.

## ஊடகங்களும் பாலின நிலை பொதுத்தன்மை (ஸ்டீரியோடைப்புகளும்) (Media and Gender Stereotypes)

தொலைக்காட்சியிலும் இணையதள ஒளிபரப்புத் தளங்களிலும் வரும் விளம்பரங்களை நீங்கள் கவனித்திருப்பீர்கள் அல்லவா? கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பொருட்களை அறிமுகப் படுத்தவும் பயன்படுத்திக் காட்டி நடிப்பதற்கும் திரையில் வருவது கூடுதலும் பெண்களா அல்லது ஆண்களா என்பதைக் கூர்ந்து கவனித்தபின் எழுதவும்.

- மசாலாப்பொடிகள்
- பாத்திரம் கழுவும் பொருட்கள்
- இரண்டு சக்கர வாகனங்கள் நான்கு சக்கர வாகனங்கள்
- அழகு சாதனப் பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- பாத்திரங்கள் அடுப்புகள் போன்ற சமையலறை பொருட்கள்
- நிதி நிறுவனங்கள்
- சிமெண்ட்

| பெரும்பாலும் பெண்கள் | பெரும்பாலும் ஆண்கள் |
|---|---|
| | |

மேலும் விளம்பரங்களை உற்றுப் பாருங்கள், எந்த பாலின நபர் இவற்றில் கூடுதலாகக் காணப்படுகிறார்?

விளம்பரங்கள் பாலின ஸ்டீரியோடைப்புகளை பல வழிகளில் வலுப்படுத்துவதைக் காணலாம்

## மொழியும் பாலின நிலை ஸ்டீரியோடைப்பும் (Language and Gender Stereotype)

நாம் பயன்படுத்தும் மொழிகளிலும் பாலின நிலை வேறுபாடு காணப்படுகிறது. மொழிகளில் பெயர்ச்சொற்களை ஆண்பால், பெண்பால் என வகைப்படுத்துவர். குடிமகன், மனிதன் என்னும் ஆண்களைக் குறிப்பது போன்ற சொற்கள் எவ்வாறு எல்லோரையும் குறிக்கும் பொதுச் சொற்களாக மாறின? எடுத்துக்காட்டாக ஆண் மருத்துவர் என்று சொல்லாமல் பெண் மருத்துவர் என்று மட்டும் பயன்படுத்தவும் செய்கின்றனர். மருத்துவர் என்ற சொல் ஏன் ஆண்களுக்கு மட்டும் உரிய வார்த்தையாகத் தோன்றுகிறது? ஆண்கள் மட்டும் கையாண்டிருந்த செயல்கள் தொடர்பான வார்த்தைகளும் சொற்றொடர்களும் இவ்வாறு தான் இப்போதும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

இத்தகைய பயன்பாடுகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் ஸ்டீரியோடைப்புகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. மொழி மூலம் இத்தகைய ஸ்டீரியோடைப் வலுவூட்டலை (Stereotype reinforcing) எவ்வாறு எதிர்க்க முடியும்? பாலின நிலையை உட்கொண்ட (Gender Inclusive) சொற்களும் பயன்பாடுகளும் இதை எதிர்ப்பதற்கான வழிமுறைகளாகும். கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கவனியுங்கள்.

- ஆசிரியர்
- பொறியாளர்
- செவிலியர்

இந்தச் சொற்களை ஆணென்றோ, பெண்ணென்றோ வேறுபடுத்திப் பார்க்க முடியுமா? இவை மொழியில் பயன்படுத்தப்படும் பாலின நிலையைக் காட்டும் வார்த்தைகளின் எடுத்துக்காட்டுகளாகும்.

மொழியில் பயன்படுத்தப்படும் பாலின நிலையை உட்கொண்ட சொற்களைக் கண்டறிந்து பட்டியலிட்டு வகுப்பில் வெளியிடவும்.

பாலின நிலை ஸ்டீரியோடைப்புகளை வலுப்படுத்தும் காரணிகள்தான் ஊடகங்களும் மொழியும் என்பதை நீங்கள் கவனித்தீர்களல்லவா? குடும்பம், கல்வி நிறுவனங்கள், கலை, இலக்கியம் போன்றவையும் பாலின நிலை ஸ்டீரியோடைப்புகளை வலுப்படுத்துகின்றன.

"மொழி, குடும்பம், கலை, இலக்கியம், கல்வி நிறுவனங்கள் போன்றவை பாலின நிலை ஸ்டீரியோடைப்புகளை (பொதுத்தன்மை) வலுப்படுத்துகின்றன" என்ற தலைப்பில் விவாதம் நடத்தி குறிப்பு தயாரிக்கவும்.

பாலின நிலை அடிப்படையிலான பங்குகளும் பழக்கவழக்கங்களும் ஸ்டீரியோடைப்புகளும் (பொதுத்தன்மை) பாலின நிலை வேறுபாட்டை நோக்கிச் செல்கிறது என்பதை நீங்கள் கவனித்தீர்கள் அல்லவா? இவை சமூகத்தில் பாலின நிலை அடிப்படையிலான வன்முறைக்கும் பாலினப் பாகுபாடுகளுக்கும் வழி வகுக்கின்றன. இவ்வாறு சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிற பாலினங்களுக்கும் சமமற்ற நிலை ஏற்படுகிறது.

## பாலின நிலை அடிப்படையிலான வன்முறைகள் (Gender based Violences)

வரதட்சணை கொடுமை: கணவர் வீட்டார் மீது வழக்கு

மூன்றாம் பாலினத்தவரைப் பொது இடங்களில் அவமானப்படுத்தினர். மூன்றாம் பாலினத்தவர் பாதுகாப்பு சட்டப்படி காவல்துறை நடவடிக்கை மேற்கோண்டது.

"இனி ஒரு நபருக்கும் இது போன்ற அனுபவம் வரக்கூடாது" பாலியல் வன்கொடுமையில் இருந்து தப்பிய அதி ஜீவிதா ஊடகங்களிடம்

பெண்சிசுக்கொலைக்கு உதவியவர்: மருத்துவருடையவும் மருத்துவமனையுடையவும் உரிமம் ரத்து செய்யப்பட்டது.

பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்: காவல்துறைக்கு புகார் செய்யாத நிறுவனத்தின் மீது நடவடிக்கை

என்னென்ன சமூகப் பிரச்சனைகள் இந்த தலைப்புச் செய்திகளில் உள்ளன

இவை அனைத்தும் பாலியல் அடிப்படையிலான வன்முறைகளாகுமா?

நம்சமூகத்தில் பாலின சமத்துவம் கிடைக்கப்பெறுகிறதா?

இது போன்ற வன்முறைகள் நம் சமூகத்தில் நிலை நிற்பது நியாயமான சமூகத்திற்கு (just society) ஏற்றதா?

## நியாயமான சமூகம் (Just Society)

ஜாதி, மதம், பாலின நிலை வேறுபாடு இன்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் சமூக பொருளாதார அரசியல் நீதி கிடைக்கக்கூடிய ஒரு சமூகமே நியாயமான சமூகம்.

> அனைத்து உறுப்பினர்களும் மகிழ்ச்சியையும் நல்வாழ்வையும் அனுபவிக்கும் ஒரு சமூகத்தை நியாயமான சமூகம் என்று கூறலாம்.
>
> நீதிபதி வி ஆர் கிருஷ்ண ஐயர்

பாலின நிலை அடிப்படையிலான வன்முறை குறித்த செய்திகளையும் படங்களையும் சேகரித்துப் படத்தொகுப்பை உருவாக்கவும். இதனுடன் பாலின நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான உங்கள் கருத்தை முத்திரை வாக்கியங்களாக்கி பள்ளியில் வெளியிடவும். இந்த கண்காட்சியில் வழங்க ஒரு சிறு உரையையும் தயார் செய்யவும்.

## பாலினப் பாகுபாடு இல்லாத உலகம்

கீழே உள்ள குறிப்பைப் படியுங்கள்

### தோள்சீலை கலகம்

ஆடை அணியும் உரிமைக்காகத் தென் திருவிதாங்கூரிலுள்ள பெண்கள் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் முதல் நடத்தி வந்த போராட்டம் தான் தோள்சீலை கலகம். நீண்டகால போராட்டத்திற்குப் பிறகு ஜாதி, மத வேறுபாடு இன்றி அனைவரும் தங்களுக்கு விருப்பமுள்ள ஆடைகளை அணிய உரிமை வழங்கி தென் திருவிதாங்கூர் அரசு அரசாணை வெளியிட்டது. இருந்தாலும் ஜாதி பழக்க வழக்கங்களால் பலருக்கும் தங்களுக்குப் பிடித்த ஆடைகளை அணிய முடியவில்லை.

### கல்லு மாலை போராட்டம்

தாழ்த்தப்பட்ட ஜாதியினராகக் கருதப்பட்ட புலையர் சமுதாயத்துப் பெண்கள் ஜாதி அடையாளமாகக் கற்கள், உடைந்த கண்ணாடி துண்டுகள் போன்றவற்றால் செய்யப்பட்ட மாலைகளைக் கழுத்தில் அணிய வேண்டிய கட்டாயம் இருந்தது. இதற்கு எதிராக அய்யங்காளி தலைமையில் கொல்லத்தில் பெருநாடு என்ற இடத்தில் நடத்திய போராட்டமே கல்லு மாலை போராட்டம். இப் போராட்டம் பெருநாடு கலகம் என்றும் அழைக்கப்படுகிறது.

ஜாதி வேற்றுமையோடு பாலின வேறுபாட்டையும் அனுபவித்த பெண்கள் நடத்திய போராட்டங்களின் எடுத்துக்காட்டுகள் இவை. அவர்கள் ஏற்கனவே நிலை நின்றிருந்த ஸ்டீரியோடைப்புகள் (பொதுத்தன்மை), பழக்க வழக்கங்கள் என்பவற்றை சவாலாக ஏற்றுக்கொண்டுதான் பாகுபாடுகளை வென்றனர்.




பாலின வேறுபாடு குறித்து மேலே கொடுக்கப்பட்டுள்ள செய்திகளைக் கவனியுங்கள். இந்தச் செய்தியிலிருந்து உங்களுக்கு என்னென்ன தகவல்கள் கிடைக்கின்றன.

வெவ்வேறு பாலின நிலையில் உள்ளவர்களுக்கு சம வாய்ப்புகள் கிடைக்கின்றனவா? குறிப்பிட்ட பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிக வாய்ப்புகள் சில துறைகளில் கிடைக்கின்றதா?

பாலின நிலை வேறுபாடுகளுக்கு இடையில் சமத்துவத்திற்குத் தடையாக இருக்கும் ஒரு முக்கிய காரணம் தான் பாலின நிலை வேறுபாடாகும். ஒரு பாலின நிலையின் ஆதிக்கத்திற்காக மற்ற பாலின நிலைகளை அடக்கும் செயல்முறை தான் பாலின நிலை பாகுபாடு (Gender discrimination).

## அரசியலமைப்பின் பாலின நிலை

இந்திய அரசியலமைப்புச் சட்ட பிரிவு 14 ஆம் பிரிவின் படி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு தனிநபருக்கும் பாலினத்தின் அடிப்படையில் வேறுபாடு வரக்கூடாது என்று பிரிவு 15 இல் கூறப்பட்டுள்ளது. பாலினத்துடன் பாலின நிலையும் தனி நபர்களின் சமூக நிலைக்கு அடிப்படையானது என்று 2014 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

இந்திய அரசியலமைப்பின் பல பிரிவுகள் பாலின நிலையுடன் தொடர்புடைய சுதந்திரங்களைத் தெளிவுபடுத்துகிறது என்று 2014–இல் நல்ஸ V/S யூனியன் ஆப் இந்தியாவின் உச்ச நீதிமன்றம் விளக்கியுள்ளது.

இந்திய அரசியலமைப்பின் பாலின நிலையுடன் தொடர்புடைய சில பிரிவுகளை அறிந்துகொள்ளலாம். அட்டவணையைக் கவனிக்கவும்.

| | |
|---|---|
| பிரிவு 14 | எல்லா பாலின நிலைகளுக்கும் சமத்துவம் |
| பிரிவு 15 | எந்த ஒரு நபருக்கும் பாலின நிலையின் அடிப்படையில் வேறுபாடு வரக்கூடாது. |
| பிரிவு 16 | அனைத்து பாலின நிலைகளுக்கும் வாய்ப்பில் சமத்துவம் |
| பிரிவு 19 (1) (a) | எல்லா பாலினப் பதவிகளுக்கும் சுதந்திரமாக உடை, நடத்தை, செயல்கள் என்பவற்றின் மூலம் தங்கள் பாலின நிலையை வெளிப்படுத்த உரிமை உண்டு. |
| பிரிவு 21 | எல்லா பாலின நிலையினருக்கும் மதிப்பிற்கும், தனிமனித சுதந்திரத்திற்கும், தனித்தன்மையைப் பேணுவதற்கும் உரிமை உண்டு. |
| பிரிவு 51A (e) | பெண்களின் மதிப்பைக் குறைக்கும் பழக்கவழக்கங்களைத் தவிர்ப்பது இந்திய குடிமகனின் அடிப்படைக் கடமை ஆகும். |

இவை அனைத்தும் கண்டிப்பாக இருக்க வேண்டிய ஒரு நியாய சமூகம் (Just Society) நாட்டில் இருக்க வேண்டும் என்பதே நமது அரசியல் அமைப்பின் தீர்மானமாகும். ஆனால் அத்தகைய நியாயமான சமூகத்தில் கிடைக்க வேண்டிய எல்லா நன்மைகளும் சமமாக எல்லா பாலின நிலைகளுக்கும் கிடைக்கிறதா?



பாலின வேறுபாட்டை அகற்றவும், அரசியலமைப்பின் அடிப்படையிலான சமத்துவமும் சுதந்திரமும் அனைத்து பாலின நிலையில் உள்ள தனிநபர்களுக்கும் கிடைப்பதற்கு என்ன செய்ய முடியும்?வகுப்பில் விவாதிக்கவும்.

கலந்துரையாடல் குறிப்புகள் :

- பாலினநிலை சமத்துவத்தை ஊக்குவிக்கும் கல்வி
- பாலினநிலை ஸ்டீரியோடைப்புகளுக்கு எதிரான சவால்
- பாலினநிலை ஸ்டீரியோடைப்புகளை ஊக்குவிக்கும் பழக்கவழக்கங்களுக்கு எதிரான சவால்
- பாலினநிலையை உட்கொண்டதும் சமத்துவத்தை வலியுறுத்தவும் செய்யும் தொழில் இடங்கள்

சமத்துவமின்மை இல்லாத ஒரு நியாயமான சமுதாயத்தை நமது அரசியல் சட்டம் முன்வைக்கிறது. சமத்துவமான ஒரு சமூகம் நிலைநிற்பதற்காக அனைத்து பாலின நிலையில் உள்ளவர்களையும் சமமாக நடத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இந்த உட்சேர்க்கும் செயல்முறையில் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் பங்கேற்பது ஒரு சமூகத்தின் பொறுப்பாகும்.

## தொடர் செயல்பாடுகள்

- பாலினப் பாகுபாடுகளுக்கு எதிராகப் போராடிய பெண்களின் கதைகளைச் சேகரித்து ஒரு டிஜிட்டல் ஆல்பம் தயாரிக்கவும்.
- பாலின வேறுபாட்டிற்கு எதிராக வரும் மறுவாழ்வுச் செய்திகளைச் சேகரித்து வகுப்பில் வெளியிடவும்.

# குறிப்புகள்

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**


*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***